



# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 44 சோபகிருது வருடம், ஆவணி மாதம் 05ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (22.08.2023) ஹிஜ்ரி 1445, ஸபர் - 05, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50







வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் கொடியேற்றத்துடன் நேற்று (21) ஆரம்பமானது. இந்நிகழ்வில் பெருந்திரளான பக்தர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

படப்பிடிப்பு: யாழ். செய்தியாளர்

# சீனக் கப்பலுக்கு இலங்கை அனுமதி!

**இந்தியாவின் எதிர்ப்பினை புறந்தள்ளி கொழும்பு அதிரடி**



இலங்கை வரவிருக்கும் சீன ஆராய்ச்சிக் கப்பலான SHI YAN 6 க்கு இலங்கை துறைமுகங்களில் உட்புக அனுமதி வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சீனாவின் இந்த ஆராய்ச்சி கப்பல், இலங்கை தேசிய... 02 பக்கம்

## மொட்டுக் கட்சியிலிருந்து ஜனாதிபதி வேட்பாளர்

**பிரிவினைகள் ஏதுமில்லையென்கிறார் சாகர காரியவசம்**

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்குள் பிளவுகள் கிடையாது. எமது கட்சியின் சார்பில் வெற்றிபெறும் ஜனாதிபதி வேட்பாளரை நாம் நிச்சயம் நியமிப்போம் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார். கட்சியின் தலைமையகத்தில் நேற்று (21) நடைபெற்ற ஊடகவியலாளர்... 02 பக்கம்

## சுகாதாரத்துறையை அழிக்கும் சதியில் அரசு



**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு**

தற்போதைய அரசாங்கம், சுகாதார அமைச்சர், சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் சுகாதார அமைச்சு என்பன இணைந்து இந்நாட்டின் சுகாதாரத்துறையை திட்டமிட்டு அழிக்கும் சதியில் ஈடுபட்டு வருவதாகவும் தேசிய... 02 பக்கம்

## மழைவேண்டி மட்டக்களப்பில் நெய் விளக்கேற்றி வழிபாடு



வ. சக்திவேல்


மட்டக்களப்பு, வவுணதீவில் கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் மழைவேண்டி பிரார்த்திக்கும் முகமாக ஆயித்தியமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் நெய் விளக்கேற்றி நேற்று (21) வழிபாடுகளை மேற்கொண்டனர். 02 பக்கம்

## ஆடைத் தொழிற்றுறையில் 20,000 பேர் வேலை இழப்பு

கே. சுபானி

நாட்டில் இந்த ஆண்டின் 08 மாத காலப்பகுதிக்குள் ஆடைக் கைத்தொழிலுடன் தொடர்புடைய நிறுவனங்களில் தொழில்புரிந்து வந்த சுமார் 20 ஆயிரம் பேர் தொழிலை இழந்துள்ளதாக சுதந்திர வர்த்தக வலய மற்றும் பொதுச் சேவை சங்கம் அறிவித்துள்ளது.

அத்தோடு இக் காலப்பகுதிக்குள் நாட்டில் பாரியளவிலான 07 ஆடைத் தொழிற்சாலைகள்... 02 பக்கம்



இருநாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு சிங்கப்பூருக்கு சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்நாட்டு ஜனாதிபதி ஹலிமா யாக்கோப்பை நேற்று (21) காலை சந்தித்து கலந்துரையாடினார். உணவுப் பாதுகாப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு உள்ளடக்கிய விடயங்கள் இதன்போது பேசப்பட்டுள்ளன.



## உஷ்

ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியமான எம்.பிக்களை உள்வாங்கும் இரகசிய பேச்சு ஜனாதிபதி தரப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாம்.

இதற்கிடையில் நேற்று சிங்கப்பூரில் முக்கிய பிரமுகர் ஒருவரை சந்தித்த ரணில், ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து உள்வாங்கப்பட வேண்டியவர்களின் பெயர்களை குறிப்பிட்டுக் கூறியுள்ளாராம்.

சஜித் பக்கம் இருக்கும் கட்சித் தலைவர்களை உள்ளீர்க்கும் விடயத்தை தானே நேரடியாக கையாளப்போவதாகவும் கூறினாராம் ரணில்..

## கமெண்ட் கந்தர்...



நாடு மட்டுமில்ல... மக்களின் பணப்பையும் வறண்டுதான் கிடக்குது பாருங்கோ...

## பஸ்ஸின் ஜன்னல் வழியாக தலைவைத்திருந்த சிறுவன்

**மின் கம்பத்தில் மோதி உயிரிழப்பு**

காலி மாவட்டம், ஹபராதுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரூமஸ்ஸல பகுதியில் பயணித்துக்கொண்டிருந்த பஸ்ஸின் ஜன்னல் வழியாக தலைவைத்திருந்த சிறுவன், வீதியோரமாக இருந்த மின் கம்பத்தில் மோதி உயிரிழந்த சம்பவம் நேற்றுமுன்தினம் (20) மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது. 02 பக்கம்

## விஷம் வைத்து விலங்குகள் கொலை

**முறைப்பாடளிக்க 1992 இலக்கம் அறிமுகம்**

02பக்கம்

## குளவிக்கொட்டுக்கு இலக்காகி 16 வயதான சிறுவன் மரணம்

**பம்பரக்கலை தோட்டத்தில் சம்பவம்**

பீ.கேதீஸ், டி.சந்ரு, செ.திவாகரன்

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பம்பரக்கலை தோட்டத்துக்கு அருகிலுள்ள வனப்பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (20) பிற்பகல் விறகு சேகரிக்கச் சென்ற இளைஞர்கள் மீது குளவிக் கொட்டியதில் 16 வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர். 02 பக்கம்



# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிங்கப்பூர் ஜனாதிபதியுடன் சந்திப்பு: அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சரையும் சந்தித்து பேச்சு






சிங்கப்பூருக்கான இருநாள் விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சிங்கப்பூர் ஜனாதிபதி ஹலீமா யகோப் (Halimah Yacob) ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று நேற்று (21) காலை இடம்பெற்றது.

சிங்கப்பூர் இஸ்தான மாளிகைக்கு சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சிங்கப்பூர் ஜனாதிபதியினால் அன்பான வரவேற்பளிக்கப்பட்டதோடு, சுமுகமாக கலந்துரையாடியதன் பின்னர் இருநாட்டு தலைவர்களும் இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

சிங்கப்பூர் மற்றும் இலங்கைக்கு இடையிலான நீண்டகால இருதரப்பு தொடர்புகளை பலப்படுத்திக்கொண்டு, முன்னோக்கிச் செல்வது தொடர்பில் இரு நாட்டு தலைவர்களும் கலந்தாலோசித்ததோடு, உணவுப் பாதுகாப்பு, மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உள்ளிட்ட துறைசார் ஒத்துழைப்புகளைப் பலப்படுத்திக்கொள்வது



தொடர்பிலும் ஆராயப்பட்டது.

அதனையடுத்து, சிங்கப்பூர் ஜனாதிபதி தனது உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில்,

“எமது நட்புறவானது மனிதர்களின் அடிப்படையிலேயே வலுவாக நிலைத்து நிற்கும். அந்த தொடர்புகளை மேலும் பலப்படுத்திக்கொள்வதற்கான பரந்த வாய்ப்புகள் காணப்படுகின்றன. இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சிங்கப்பூர் சுற்றுப்பயணம் பலன்மிக்கதாகவும் வெற்றிகரமானதாகவும் அமையட்டும்" என பதிவிட்டிருந்தார்.

அதனையடுத்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சிங்கப்பூர் பாதுகாப்பு அமைச்சர் கலாநிதி நெங் எங் ஹென் (Ng Eng Hen) ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்றும் நேற்று (21) பிற்பகல் நடைபெற்றது.

இதன்போது, இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் இடையிலான பாதுகாப்பு தொடர்புகளை வலுப்படுத்திக்கொள்வது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

அதேபோல், தெற்காசிய வலயத்தின் பொது பிரச்சினைகள் தொடர்பில் தொடர்ச்சியான தகவல் பரிமாற்றம் மற்றும் உரிய வகையிலான தொடர்பாடல்களை பேண வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார். வலயத்தின் பாதுகாப்பு ஒத்துழைப்புகளை பலப்படுத்திக்கொள்ள இரு தரப்பும் அர்ப்பணிக்க வேண்டும் என்ற இணக்கப்பாடும் எட்டப்பட்டது.

# போதுமான அளவு அரிசி கையிருப்பில் உள்ளது

## தட்டுப்பாடு ஏற்படாதென அமைச்சர் அமரவீர தெரிவிப்பு



நாட்டில் தற்போது கையிருப்பில் உள்ள நெல் மற்றும் அரிசி அடுத்த பெரும் போக அறுவடை வரை போதுமானதாக இருப்பதால், நாட்டில் அரிசி தட்டுப்பாடு ஏற்படாது என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர வலியுறுத்தியுள்ளார்.

வறட்சி காரணமாக ஒரு இலட்சம் ஏக்கர் நெற்செய்கையில் பயிர்கள் நட்டமடைந்த போதிலும் அரிசி தட்டுப்பாடு ஏற்படாது என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

சிறு போகத்தில் 503,000 ஹெக்டெயர் பயிர் செய்யப்பட்டுள்ளதாகவும் பல மாவட்டங்களில் அதிக விளைச்சல் கிடைப்பதால் நாட்டில் போதுமானளவு இருப்புகள் இருக்கும் என்றும் விவசாய அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

விவசாயத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில், அறுவடை செய்யப்பட்ட பல வயல்களில் அதிக விளைச்சல் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, அரிசி தட்டுப்பாடு ஏற்படும் என அச்சப்படத் தேவையில்லை.

எவ்வாறாயினும், விவசாயிகள் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு நெல்லை விற்பனை செய்வதை தவிர்த்து வருவதால், அரசிடம் அரிசி அல்லது நெல்லுக்கான போதிய இருப்பு இல்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தற்போது நெல் இருப்புகள் அனைத்தும் தனியாரிடம் இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

### சீனக் கப்பலுக்கு...

நீர்வள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்துடன் (NARA) இணைந்து ஆராய்ச்சியை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது. கொழும்பு, அம்பாந்தோட்டை துறைமுகங்களில் இந்தக் கப்பல் தரித்து நிற்கவுள்ளது.

குறித்த கப்பல் இலங்கைக்குள் அனுமதிக்கப்படக் கூடாதென இந்தியா இராஜதந்திர அழுத்தங்களை வழங்கியபோதும், சீனாவை பகைக்க விரும்பாத இலங்கை அரசு கப்பலை அனுமதிக்க தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் ஒக்டோபரில் சீனா செல்லவுள்ளதால், சீனாவிடம் இருந்து கிடைக்கும் உதவிகளுக்கு தடைகள் எதுவும் வந்துவிடக் கூடாதென கருதி இந்த தீர்மானத்தை கொழும்பு எடுத்திருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கையின் இந்த தீர்மானத்தால் புதுடில்லி கடும் அதிருப்தியடைந்துள்ளதாக தெரியவந்தது.

# அனைத்து அரசியல் கட்சிகளும் ஜனாதிபதி ரணிலுடன் இணைந்து செயற்பட வேண்டும்

## ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹிணி கவிரத்ன அழைப்பு

எம். எஸ். எம். மஸாஹிம்

பொருளாதார மற்றும் அபிவிருத்தி ரீதியாக விழுந்து கிடக்கும் நாட்டை கட்டியெழுப்பிட எதிர்க்கட்சி உட்பட சகல அரசியல் கட்சிகளும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து செயல்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி அல்லது ஏனைய தேர்தல்கள் வரும் போது கட்சி ரீதியாக பிரிந்து தேர்தல்களுக்கு முகங்கொடுக்க முடியுமெனவும் அதுவரை நாட்டுக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் ஜனாதிபதியுடன் இணைந்து செயல்படுவது காலத்தின் முக்கியத் தேவையென ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹிணி கவிரத்ன தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலவரங்கள் பற்றி ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்,

நாடு சுதந்திரத்துக்குப் பின்னர் அபிவிருத்தி மற்றும் பொருளாதார ரீதியாக மிகவும் மோசமான நிலையில் நாடு செல்கின்றது. இதனால் அரசியல் புரியும் நாம் ஒருவருக்கொருவர் கைவிரல் நீட்டி குற்றம் சுமத்துவதை தவிர்த்து நாட்டை கட்டியெழுப்பி மக்களுக்கு விமோசனம் ஏற்பட கட்சி பேதங்களை மறந்து எதிர்க்கட்சி உட்பட சகல அரசியல் கட்சிகளும் ஜனாதிபதியுடன் இணைந்து செயல்பட வேண்டுமென்பதே எனது ஆணித்தரமான கருத்தாகும்.

எதிர்க்கட்சி உட்பட ஏனைய அரசியல் கட்சிகள் ஜனாதிபதியுடன் இணைந்து அமைச்சு பொறுப்புகளை பெற்று அதனூடாக சுகபோக வாழ்க்கை அனுபவிக்க வேண்டுமென்பது இதன் கருத்தல்ல.

அரசின் எந்த ஒரு வரப்பிரசாதங்களையும் பெற்றுக் கொள்ளாமல் நாடு விழுந்து கிடக்கும் நிலையில் நாட்டு மக்கள் முகங்கொடுக்கும் சவால்களிலிருந்து நாட்டையும் நாட்டு மக்களையும் கட்டியெழுப்பிட அரசியல் மற்றும் கட்சிக் கலாசாரங்களை மறந்து அரசியல் கட்சிகள் ஒன்றிணைய வேண்டுமென்பது எனது முக்கிய குறிக்கோள் ஆகும்.

எனவே, வீடு என்ற ஒன்று இருந்தாலே அங்கு எம்மால் குடியிருக்க முடியும் என்பது போல நாடு



என்ற ஒன்று இருந்தாலே நம்மால் கட்சி ரீதியாக அரசியல் புரிய முடியுமென்பதை நாம் புரிந்து செயல்பட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

எனவே, நாடு முகங்கொடுக்கும் இன்றைய சூழ்நிலையில் நாட்டின் மீது கரிசனை கொண்டவர்களாக அரசியல் கொள்கைகளுக்கு அப்பால் செயற்பட்டு தேர்தல் காலங்களில் அரசியல் ரீதியாக எமது கட்சி செயற்பாடுகளை முன்னெடுத்து செல்ல முடியுமென கூறும் ரோஹிணி கவிரத்ன, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து அரசியல் நடத்த நான் கூறவில்லை என்றார்.

### மொட்டுக் கட்சியிலிருந்து...

சந்திப்பின்போது எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நிமல் லான்சா, வேறொரு கட்சியை ஆரம்பிப்பாரெனின், அவர் எமது கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தியவர் என்ற வகையில் நாம் வாழ்த்துகிறோம். எனினும், அதனை முன்னெடுத்துச் செல்வது சிரமமானதாகும்.

டலஸ் அலகப்பெரும பாரியதொரு அரசியல் கூட்டணியை உருவாக்கப்போவதாக கூறுகிறார். ஆனால், அப்படியொன்றும் எமக்குத் தெரியவில்லை. அவர் வேறொரு கட்சியில் இணைவதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

ஒருசிலருக்கு ஜனாதிபதி கனவு இருக்கலாம், மற்றும் சிலருக்கு பிரதமர் கனவு, அமைச்சர் கனவு என்றிருக்கலாம். அவ்வாறு சுயலாபத்துக்காக கட்சிகளை அமைத்துக்கொண்டாலும் நாட்டில் பெரும்பாலான மக்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடனேயே இருக்கின்றனர்.

எமது கட்சிக்குள் பிரிவினைகள் கிடையாது. நாம் எமது கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தின் கீழ் செயற்பட்டு வருகிறோம் என்றார்.

### குளவிக்கொட்டுக்கு...

மேலும், அறுவர் குளவிக் கொட்டுக்குள்ளாகிய நிலையில் சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவர்களில் மூவர் சிகிச்சையின் பின் வீடு திரும்பியுள்ளதுடன் மூவர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அந்த மூவரில் ஒருவர் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

நுவரெலியா பம்பரகலை தோட்டத்தைச் சேர்ந்த சிவபெருமாள் தில்ஷான் (வயது16) என்ற சிறுவனொருவனே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த சிறுவன் குளவி கொட்டும்போது தப்பித்து ஓடுவதற்கு முயன்று தடுக்கி விழுந்துள்ளதுடன் அவ்விடத்திலேயே கடுமையான குளவிக் கொட்டுக்கு இலக்காகிய நிலையில் உயிரிழந்துள்ளார். சிறுவனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### விஷம் வைத்து...

கே. சுபானி

விஷம் வைத்து வன விலங்குகளை வேட்டையாடுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் அவை குறித்து 1992 என்ற தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொண்டு தகவல்களை வழங்கலாம் என வனவிலங்குகள் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாதுகாக்கப்பட்ட சரணாலயங்கள் மற்றும் வனப்பகுதியை அண்டிய பகுதியில் வாழும் வனவிலங்குகள் நீர் அருந்த வரும் வேளையில் அவை கொல்லப்பட்டு, இறைச்சிக்காக விற்பனை செய்யப்படுகின்றமை அதிகரித்துள்ளதாக பொலிஸ் மற்றும் வனவிலங்குகள் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவ்வாறு கொல்லப்படும் வனவிலங்குகளின் இறைச்சி கதிர்காமம், செல்லக்கதிர்காமம் மற்றும் திஸ்ஸ உள்ளிட்ட பிரதேசங்களில் இயங்கி வரும் சில ஹோட்டல்களுக்கு பணத்துக்காக விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை அதிகரித்துள்ளது.

நாட்டில் நிலவும் கடும் வறட்சியுடனான காலநிலையால் வனவிலங்குகள் குடிப்பதற்கான நீரின்றி சிறு நீர்நிலைகளை தேடி வருகின்றன. அவ்வாறு வரும் அப்பாவி வனவிலங்குகளே வேட்டையர்களின் இலக்காகவுள்ளன. சிலர் விலங்குகளை கொல்வதற்காக குறித்த சிறு நீர்நிலைகளுக்கு அருகில் பொறி வைப்பதுடன் குறித்த நீர்நிலையில் நஞ்சு கலப்பதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யால, வில்பத்து, உடவளவ போன்ற பாதுகாக்கப்பட்ட சரணாலயங்களில் வாழும் அப்பாவி உயிரினங்களில் மான், மரை மற்றும் காட்டுப்பன்றி போன்றன வேட்டையர்களின் இலக்காகின்றன.

இவ்வாறு கொல்லப்படும் வனவிலங்குகளின் இறைச்சி ஹம்பாந்தோட்டை, கதிர்காமம், மாத்தறை அநுராதபுரம், மட்டக்களப்பு மற்றும் பொலன்னறுவை போன்ற சுற்றுலாப் பிரதேசங்களிலுள்ள ஹோட்டல்களுக்கு விற்கப்படுவதுடன் இதனால் வேட்டையர்களும் வர்த்தகர்களும் பெரும் இலாபமீட்டி வருகின்றனர்.

இவ்வாறான ஹோட்டல்களை சுற்றிவளைத்து வேட்டையர்களுக்கு பொறி வைப்பதற்கான சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் வனவிலங்குகளை வேட்டையாடுவதற்காக வனப்பகுதிக்கு சிலர் தீ வைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் மேற்படி வேட்டையர்கள் தொடர்பில் வனவிலங்குகள் பாதுகாப்புத் திணைக்களம் அவதானம் செலுத்தியுள்ளதுடன் அவர்கள் தொடர்பில் தகவல்கள் கிடைப்பின் 1992 என்ற இலக்கத்தை தொடர்புகொண்டு தெரிவிக்கலாம் என திணைக்களம் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை, நஞ்சு கலந்து கொல்லப்படும் வனவிலங்குகளின் இறைச்சியை உட்கொள்வதால் உடலுக்கு தீங்கு ஏற்படும் என அத்திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

### ஆடைத் தொழிற்றுறையில்...

மூடப்பட்டுள்ளன. அத்தோடு கைத்தொழிற்சாலைகளின் எதிர்பார்க்கப்பட்ட நாளாந்த உற்பத்திகள் பாரியளவில் குறைக்கப்பட்டுள்ளன என சங்கத்தின் இணைச் செயலாளர் எண்டன் மார்கஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெரியளவிலான தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதால் குறித்த தொழிற்சாலைகளுக்கு சேவை வழங்கும் நிறுவனங்கள் பல மூடப்பட்டு வருவதாகவும் வெளிநாடுகளிலிருந்து உற்பத்திக்கான கேள்வி கிடைக்காததால் ஆடைக் கைத்தொழில் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.

இதனால் சுமார் 20ஆயிரம் பேர்வரை தொழிலை இழக்க நேரிட்டுள்ளது. இதனால் அரச கைத்தொழில் நிறுவன உரிமையாளர்களை ஒன்றிணைத்து ஓடர்களை பெற்றுக்கொள்வதற்கான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறைந்தளவிலான உற்பத்திக் கேள்வியே கிடைக்கப்பெறுவதால் சில நிறுவனங்களில் தொழில்புரியும் பணியாளர்களுக்கு அடிப்படை சம்பளம் மாத்திரமே வழங்கப்படுகின்றது. நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அடிப்படை சம்பளத்தை மாத்திரம் கொண்டு வாழ்க்கையை கொண்டுச் செல்லமுடியாதுள்ளது என்பதால் பணியாளர்கள் தொழிலை விட்டுச் செல்கின்றனர்.

இந்நிலையில் மக்களின் மனித உரிமை மீறல், அரசு அடக்குமுறை, முறையான வழிமுறை இல்லாமல் தொழில் சட்டவிதிமுறைகளை மாற்ற முயற்சித்தல், ஊழியர் சேமலாப மற்றும் நம்பிக்கை நிதியத்திலிருந்து அரசு பெற்றுக்கொண்ட கடனுக்கான வட்டியை குறைப்பது தொடர்பில் உலகநாடுகளின் அவதானம் திரும்பியுள்ளதாகவும் ஓடர்கள் குறைந்துள்ளதால் மேற்கண்ட விடயங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### சுகாதாரத் துறையை...

மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டம் மற்றும் மருத்துவ கவுன்சில் சட்டத்தை முற்றாக நீக்குவதற்கு அரசாங்கம் முயற்சித்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மருத்துவத் துறையில் உள்ள பல்வேறு சங்கங்களுடன் எதிர்க்கட்சி ஒன்றியத்தின் செயற்குழு நேற்று (21) நடத்திய கலந்துரையாடலின் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தச் சட்டங்களில் அவ்வப்போது திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தாம் நம்பினாலும் இந்தச் சட்டங்களை முற்றாக நீக்குவது என்பது மருந்து மாபியாவுக்கு இடம்கொடுப்பதும் பல்வேறு பல்தேசிய மருந்துக் கம்பனிகள் தலைமையிலான சர்வதேச நிறுவனங்களை நாட்டின் மருந்துக் கொள்கையை கையாள அனுமதிப்பதும்தான் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நேரத்தில், சுகாதாரத்துறை ஒரு பேரழிவாக மாறியுள்ளது. நாட்டை விட்டு வெளியேறும் மருத்துவர்களால் புத்திசாலிகள் வெளியேற்றம் போலவே மருந்து பற்றாக்குறையை ஏற்படுத்தியுள்ளனர் என்றும் உயர்தரத்திலான மருந்துகளை நியாயமான மற்றும் மலிவு விலையில் வழங்குவதே ஒரு அரசாங்கத்தின் பொறுப்பு.

இருந்தபோதிலும், தற்போதைய அரசாங்கம் கட்டளைச்சட்டங்கள், ஆணைகளை பயன்படுத்தி கொள்முதல் முறைகளை புறக்கணித்து, அமைச்சரினதும் செயலாளரினதும் ஆட்சியாளர்களினதும் விருப்பத்துக்கு ஏற்ப மருந்துத் தொழிலில் ஒரு நட்புவட்டார முதலாளித்துவத்தை உருவாக்கியுள்ளது. தனது நண்பர்களுக்கு மருந்துப் பொருட்களை நாட்டுக்குள் கொண்டு வர அனுமதியளித்து சந்தையில் வெளியிடுவதற்கும் அனுமதித்து இதன்மூலம் தரம் தாழ்ந்த மருந்து மாபியாவின் செயற்பாட்டை அனுமதித்ததாகவும் இதன்போது தெரிவித்தார்.

நாட்டில் இயங்கிவரும் மருந்துப்பொருள் மாபியாவை நிறுத்த வேண்டும். இந்த ஊழல் முறைகளை தோற்கடிக்க வேண்டும். இது பொதுச் சொத்துகளையும் மக்களின் பணத்தையும் கொள்ளையடிக்கும் செயலாகும்.

அத்தியாவசிய மற்றும் அத்தியாவசியமற்ற மருந்துகளை ஒரே நேரத்தில் இறக்குமதி செய்து மக்களின் பணத்தை வீணடிக்கும் வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இந்நாட்டுக்கு அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாலான வெளிப்படையான, செயல்திறன் வாய்ந்த தேசியக் கொள்கை தேவை. அதை நடைமுறைப்படுத்துவதில் அரசியல் செல்வாக்கு தவிர்க்கப்பட வேண்டும். இதற்காக பாராளுமன்றத்தின் ஊடாக மேற்கொள்ள முடியுமான அதிகபட்ச போராட்டம் முன்னெடுக்கப்படும்.

மேலும், நாட்டுக்கு சாதகமான நல்லது பயக்கும் எந்த ஒரு நல்ல விடயத்தையும் ஐக்கிய மக்கள் சக்தி ஆதரித்தாலும் பதவிகளை தேடி அதை செய்வதில்லை. மக்களை மரணப் படுக்கைக்கு இட்டுச் செல்லும் அரசாங்கத்துடன் கைகோர்க்கத் தயாராக நாம் இல்லை.

முறையான கணக்கெடுப்பு இல்லாமல் செயல்படுத்தப்பட்டதால் அஸ்வெசும திட்டம் தோல்வியடைந்துள்ளது. இதே முறையை சுகாதாரத்துறைக்கும் பயன்படுத்துவதன் மூலம் சுகாதாரத்துறையையும் அழிக்கும் வேலைத்திட்டத்தில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. அடுத்த பாராளுமன்ற அமர்வில் 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் சாமானியர்களின் உயிரைக் காப்பாற்றுவதா அல்லது மக்களை மரணப் படுக்கைக்கு இட்டுச் செல்லும் கொள்கைகளுக்காக முன் நிற்பதா என்பதை முடிவு செய்ய வேண்டி வரும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதன்போது, தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகார சபை சட்டம் மற்றும் இலங்கை மருத்துவ கவுன்சில் சட்டம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

### பஸ்ஸின்...

குளியாப்பிட்டி பகுதியிலிருந்து கல்விச் சுற்றுலாவுக்கு சென்ற அறநெறிப் பாடசாலை மாணவர்களில் ஒருவரே இந்த அனர்த்தத்துக்கு முகங்கொடுத்துள்ளார். இச்சம்பவத்தில் குளியாப்பிட்டி உடுபத்தாவையைச் சேர்ந்த 16 வயது மாணவனே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ்ஸின் பின் இருக்கையில் அமர்ந்திருந்த சிறுவன் ஜன்னல் வழியாக தலையை வைத்துக்கொண்டு பயணிக்கையிலேயே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. இதன்போது கடும் காயங்களுக்குள்ளான சிறுவன் கராபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் ஹபராதுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

### மழைவேண்டி...

நாட்டில் நிலவும் கடும் வறட்சி காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்திலும் ஆறு பிரதேச செயலகப் பிரிவுகளில் ஒன்பது ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. இந்த மாவட்டத்தில் நிலவும் தொடர்ச்சியான கடும் வறட்சி காரணமாக வாகரை வடக்கு, மண்முனை மேற்கு, வெல்லாவெளி, மண்முனை தென்மேற்கு உள்ளிட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், தங்களது விவசாயச் செய்கை மற்றும் கால்நடை வளர்ப்புகள், வாழ்வாதார தொழில்களை பாதுகாக்கும் பொருட்டு வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் உள்ள மக்கள் தத்தமது குலதெய்வ கோயில் வழிபாடுகளில் ஞாயிற்றுக்கிழமை ஈடுபட்டனர்.

ஆயத்தியமலை ஸ்ரீபத்ரகாளி அம்பாள் ஆலயத்தில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் உள்ள மக்கள் தமக்கு நிரந்தரத் தீர்வாக மழை வேண்டி வழிபாடுகளிலும் நேர்த்திக்கடன்களிலும் ஈடுபட்டனர்.

இதேவேளை, தமது குலதெய்வத்துக்கு பொங்கல் வைத்து, நெய் விளக்கேற்றி, தேங்காய் உடைத்து, பூஜை தட்டுகளை தானமாக வழங்கி அங்குள்ள ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்டனர். தமது குலதெய்வ வழிபாட்டின்மூலம் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்பது அப்பகுதி மக்களின் ஐதீகமாகும்.

# மின்சார சபை மறுசீரமைப்பு விரைவில்

## பதவி மாற்றங்கள் குறித்து அமைச்சர் காஞ்சன விசேட ஆலோசனை



மின்சார சபையின் பதவி மாற்றங்களை மேற்கொள்ள வலுசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர விசேட கவனம் செலுத்தியுள்ளார்.

இதுதொடர்பான சந்திப்பொன்று மின்சார சபையின் தலைவர், பொது முகாமையாளர் மற்றும் பணிப்பாளர் குழுவுடன் அமைச்சர் நேற்று (21) கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

இதன்போது, மின்சார சபையின் சிரேஷ்ட முகாமையாளர்களுக்கான பதவி உயர்வுகள் தொடர்பாக அமைச்சின் அனுமதியைப் பெறுவதற்கும் முகாமைத்துவ பதவிகளுக்கான பதவி உயர்வுகளுக்கு மீதமுள்ள குறைந்தபட்ச சேவைக் காலம் குறித்து 2025 முதல் நடைமுறைப்படுத்தப்பட இருந்த 2020இல் எடுக்கப்பட்ட குழு முடிவை உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கும் அமைச்சர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

தற்போதைய பொது முகாமையாளர் அடுத்த மாதம் ஓய்வு பெறுவதால், முன் நிர்வாக அனுபவம் மற்றும் ஓய்வு பெறுவதற்கு குறைந்தபட்சம் 03 வருட சேவைக் காலம் மீதமுள்ள நபர்களுக்கு பொது முகாமையாளர் பதவிக்கு நபர்களை பரிந்துரைக்கவும் அமைச்சகத்தின் ஒப்புதலைப் பெறவும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

மின்சார சபையின் மறுசீரமைப்பு செயல்முறை, மின் உற்பத்தித் திட்டங்கள், சொத்து முகாமைத்துவம், நிர்வாக மற்றும் இயக்கச் செலவுகளைக் குறைத்தல் மற்றும் மின்சார சபை தொடர்பான பிரச்சினைகள் குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி ரணிலின் வாக்குறுதிகளில் எங்களுக்கு நம்பிக்கையில்லை!

## பொறுமையை சோதிக்க வேண்டாம் என்று தொழில் வல்லுனர்களின் தொழிற்சங்க ஒன்றியம் எச்சரிக்கை



அரசியல்வாதிகளின் வாய்வார்த்தைகளை நம்பி ஏமாற்றமடைவதற்கு தயாராக இல்லை என்று அறிவித்துள்ள தொழில் வல்லுனர்களின் தொழிற்சங்க ஒன்றியம், தொழில் துறைசார்ந்தவர்களின் பொறுமையையும் தொழில் தர்மத்தையும் ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் தவறாக பயன்படுத்திக்கொள்ளக் கூடாது என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

செப்டெம்பர் 14ஆம் திகதியாகும் போது நாட்டை மீண்டும் நெருக்கடி நிலைக்கு உள்ளாக்க அரசாங்கம் முயற்சிக்கிறதா என்ற சந்தேகம் எங்களுக்கு இருக்கிறது. உண்மையான பிரச்சினைகளை மூடிமறைக்காமல் வருமான வரி கொள்கை தொடர்பில் எங்களுக்கு சரியான தெளிவுபடுத்தல்களை வழங்கவேண்டும். மீண்டும் தொழிலாளர்களை வீதிக்கு இறக்குவதா? தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்பதா என்ற தீர்மானம் ஜனாதிபதியின் செயற்பாடுகளிலேயே தங்கியிருப்பதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித்த அளுத்கே தெரிவித்தார்.

தொழில் வல்லுனர்களின் தொழிற்சங்க ஒன்றியம் நேற்று (21) கொழும்பில் நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

சமூக பொருளாதாரத்தில் ஏற்பட்ட நெருக்கடியின் காரணமாக சுகாதாரத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் வீழ்ச்சியை சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆரம்பத்திலேயே இதுதொடர்பான எச்சரிக்கையை விடுத்திருந்தேன். அதற்கு அப்பால் சகல துறைகளும் நெருக்கடிக்குள்ளாகும் நிலையையும் நாங்கள் அவதானித்திருந்தோம். எனவே தற்போதாவது வரி கொள்கை உள்ளிட்ட சகல பரிந்துரைகள் தொடர்பிலும் அரசாங்கம் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனத்தில் கொள்ளவேண்டும்.

அவ்வாறு இல்லாவிட்டால் இந்த சகல பிரச்சினைகளினதும் பிரதிபலன்களை நாட்டு மக்களே அனுபவிப்பார்கள். சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு செல்லும்போது மருத்துவர்கள் இல்லாமல் போகும்போது, சேவை வழங்க அதிகாரிகளுக்கான பற்றாக்குறை ஏற்படும்போதே அதன் பிரதிபலன்களை மக்கள் அனுபவிப்பார்கள்.

வரிக்கொள்கை திருத்தம் தொடர்பில் நாங்கள் பல்வேறு பரிந்துரைகளையும் செயற்பாடுகளையும் முன்னெடுத்திருந்தாலும் இதுவரையில் அரசாங்கம் எங்களுக்கு வழங்கிய வாக்குறுதியை காப்பாற்றவில்லை. நாணய நிதியத்தின் முதலாவதாக முன்னெடுக்கப்படவுள்ள திருத்தத்தின்போது எங்களின் கோரிக்கையை உள்ளடக்கிய திருத்தமொன்றை முன்வைப்பதாக கூறியிருந்தார்கள். ஒரு மாதத்துக்கு முன்னர் நாங்கள் ஜனாதிபதியை சந்தித்திருந்தபோது, திருத்தம் தொடர்பான யோசனைகள் தயாரிக்கப்பட்டு வருகின்ற நிலையில், அவற்றை தற்போது வெளிப்படுத்த முடியாது. நாணய நிதியத்துடனான மீளாய்வின்போது எங்களின் யோசனைகளுடன் தொடர்புடைய திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்போம் என்று குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறு வாய்வார்த்தைகளுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ள இந்த செயற்பாடுகளை, நடைமுறையில் எவ்வாறு செயற்படுத்துவது என்பது தொடர்பிலும் அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும் என்பதே எங்களின் நிலைப்பாடாகும். அவ்வாறு தெரிந்துகொள்ள எண்ணுவதற்கு காரணம் அரசியல்வாதிகளின்மீது எங்களுக்கு நம்பிக்கைத் தன்மை இல்லை. அவர்களின் வாக்குறுதிகளிலும் நம்பிக்கையில்லை. இவர்களின் வாய்வார்த்தைகளை கொண்டு முன்னோக்கிச் செல்ல முடியாது என்பதே எங்களின் நிலைப்பாடாக இருக்கிறது.

வரித் திருத்தம் தொடர்பில் முன்வைக்கப்படவுள்ள பரிந்துரைகள் தொடர்பில் எங்களுக்கு அரசாங்கம் தெளிவுபடுத்தலை வழங்கவேண்டும். இதற்கு முன்னர் எங்களுக்கு வழங்கிய வாக்குறுதி நிறைவேற்றப்படாததன் காரணமாகவே கடந்த வாரம் ஜனாதிபதி செயலகத்துக்குச் செல்ல நேர்ந்தது. எனவே, தொடர்ந்து தொழில் நிபுணர்களின் பொறுமையையும் தொழில் தர்மத்தையும் தவறாக பயன்படுத்தி இந்த பிரச்சினையை மூடி மறைக்க முயற்சிக்கக் கூடாது. அதற்கு இடமளிக்கவும் போவதில்லை.

அதற்கமைய, தொழிலாளர்களை மீண்டும் வீதிக்கு இறக்கவோ அல்லது தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கவோ உட்படுத்த யாராவது முயற்சித்தால், அதற்கான பதிலடியை சரியான நேரத்தில் வழங்குவோம். செப்டெம்பர் இடைபகுதியில் நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு நாட்டுக்கு வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அவர்கள் மீண்டும் நாட்டுக்கு வரும்போது மீண்டும் நாட்டில் நெருக்கடியை ஏற்படுத்தி பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்காமல் மூடி மறைக்க முயற்சிப்பதனூடாக எவ்வாறான திட்டங்களை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளார்கள் என்பது எங்களுக்கு புரியவில்லை. சந்தேகமும் ஏற்பட்டுள்ளது.

பிரச்சினைக்கான தீர்வு என்னவென்பது குறித்து அறிவிக்கவும் அதற்கான கலந்துரையாடலை பெற்றுக்கொடுக்குமாறும் ஜனாதிபதி மற்றும் அவரின் செயலாளரிடம் கோருகிறோம். அதேபோன்று மக்களுக்கு ஏற்படும் விளைவுகள் குறித்தும் தெளிவுபடுத்த வேண்டும். எனவே, மேலும் அரசாங்கத்தின் மீதான அழுத்தத்தை தீவிரப்படுத்தவும் 14ஆம் திகதி நாணய நிதிய குழு நாட்டுக்கு வரும்போது போராட்டத்தை ஆரம்பிக்கவும் நேரிடும் என்றார்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆவணி மாதம் 05ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

மேஷம்: நினைத்த காரியத்தில் வெற்றி. நீங்கள் கேட்ட கடன் இன்று கிடைக்கும்.

ரிஷபம்: அதிர்ஷ்டத்தினை சோதித்து பணத்தை இழப்பீர்கள். மனதை சமாதானப்படுத்திக் கொள்ளுங்கள்.

மிதுனம்: வீடு, வாகனத்தால் வீண் செலவுகள் அல்லது தொல்லைகள் ஏற்படும். தாயின் ஆசியினை பெற்றுக் கொள்ளுங்கள்.

கடகம்: நீண்ட நாள் முயற்சி வெற்றியைக் கொடுக்கும். நண்பர் உறவினர் தொடர்பால் நன்மைகள் உண்டு.

சிம்மம்: வாய் வார்த்தைகளை நிதானமாகப் பிரயோகியுங்கள். கடன் கொடுப்பதும் வாங்குவதும் சிக்கலைத் தரும்.

கன்னி: அலைச்சலும் செலவுகளும் நிறைந்த நாள். மனதை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளவும்.

துலாம்: நினைத்த காரியத்தை சிரமமின்றி முடிப்பீர்கள். உடல் பலம், மன நலம் சிறப்பாக இருக்கும்.

விருச்சிகம்: குடும்ப உறவில் சிக்கல் ஏற்படலாம். தேவையற்ற பயணங்களால் வெறுப்படைவீர்கள்.

தனுசு: தொழில் ரீதியில் உங்களுக்கு பாராட்டுகள் கிடைக்கும். விரும்பிய பெண் உறவால் மகிழ்ச்சியடைவீர்கள்.

மகரம்: புதிய தொழில் வாய்ப்புகள் வந்தமையும் திட்டமிட்ட காரியங்களில் சாதனை செய்வீர்கள்.

கும்பம்: வெளிநாட்டுப் பயணம் நினைத்தது போல நிறைவேறும். உங்கள் சொத்துகளின் மீது கவனம் செலுத்துங்கள்.

மீனம்: ஆலோசிக்காது முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம். கோபத்தால் பொறுமை இழந்துவிடாதீர்கள்.

**திதி:**ஷஷ்டி பி.இ.3.06 வரை பின் சப்தமி
**நட்சத்திரம்:**சித்திரை மு.ப.6.31 வரை பின் சுவாதி
**யோகம்:**மரண யோகம் மு.ப.6.31 வரை பின் சித்த யோகம்
**வார சூலை:**வடக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்லநேரம்:**மு.ப. 8.07 – 9.07 மணிவரை
**ராகுகாலம்:**3.07 – 4.37 மணிவரை
**எமகண்டம் :**9.07 –10.37 மணிவரை
**குளிகை:**12.07 – 1.37 மணிவரை
**சந்திராஷ்டமம் :**மீன ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தன அதிஷ்டம்:** மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம்(பிறந்தவர்களுக்கு)
**விசேட தினம் :**ஷஷ்டி விரதம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# சண்டிலிப்பாயில் வீடொன்றின் மீது தாக்குதல்

## நபரொருவர் காயம்



யாழ்ப்பாணம் - மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சண்டிலிப்பாய் வடக்கு ஆலங்குழா பகுதியிலுள்ள வீடு ஒன்று தாக்கப்பட்டு தீ வைக்கப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் (20) இரவு 8:30 மணியளவில் பதிவானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முகத்தை கறுப்பு துணியால் கட்டி வந்த நால்வர் உள்ளடங்கிய கும்பல் அத்துமீறி வீட்டினுள் பிரவேசித்து வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளை உடைத்ததுடன் குளிர்சாதனப் பெட்டி, தொலைக் காட்சி, சோக்கேஸ், சமையலறை உபகரணங்கள், தளபாடங்கள் என்பவற்றை அடித்து நொறுக்கி சேதம் விளைவித்துள்ளதுடன் இருமோட்டார் சைக்கிள்களை எரித்து விட்டு தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, இது குறித்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் தடயவியல் பொலிஸார் நேற்று (21) தடயங்களை ஆய்வு செய்தனர். வீட்டிலிருந்த 20 வயது இளைஞன் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# வாகன விபத்தில் தாயும் மகளும் பலி

## அநுராதபுரத்தில் சோகம்

அநுராதபுரம் நிருபர்

அநுராதபுரம் டிப்போ வீதியிலுள்ள சிவஞானம் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் இடம்பெற்ற கோர விபத்தில் பெண்ணொருவரும் அவரது எட்டு வயது மகளும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக அநுராதபுரம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று (21) முற்பகல் 10.45 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் அநுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

கலாஓயா, சமகிமாவத்த யாய, 14 கொலணி பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய சசிகா துலாணி வீரசிங்க அவரது மகளான திசானி பிரியங்கா ஆகியோருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அநுராதபுரம் டிப்போ வீதியூடாக நகர் பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த தாயும் மகளும் பயணித்த அதே திசையில் பயணித்துக்கொண்டிருந்த பாரவூர்தியொன்று (டென்வீல்)முந்திச் செல்வதற்கு முற்பட்டபோது மோட்டார் சைக்கிளில் மோதி இக்கோர விபத்து இடம்பெற்றுள்ளதென்பது ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

விபத்தில் உயிரிழந்த இருவரது சடலங்களும் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்துடன் தொடர்புடைய பாரவூர்தியின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நல்லூர் கந்தனின் வருடாந்த மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது







வரலாற்றுச் சிறப்புமிக்க அலங்கார நல்லூர் கந்தனின் வருடாந்த மகோற்சவ கொடியேற்றம் நேற்று (21) பக்திபூர்வமாக இடம்பெற்றது.

கருவறையில் வீற்றிருந்த அலங்கார கந்தனுக்கும் வள்ளி, தெய்வானைக்கும் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன.

தொடர்ந்து காலை 10.00 மணியளவில் மேளதாள வாத்தியங்கள் முழங்க சிவாச்சாரியர்களின் வேதபாராயண ஓத ஆலய பிரதம குரு சிவஸ்ரீ வைகுந்தன் தலைமையிலான சிவாச்சாரியர்களால் கொடியேற்றி வைக்கப்பட்டது.

நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமான மகோற்சவத்தில் எதிர்வரும் 25 நாட்கள் திருவிழா இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் 30ஆம் திகதி அன்று 10ஆவது திருவிழாவாக திருமஞ்சத் திருவிழாவும் 04.09.2023 அன்று 12ஆவது திருவிழாவாக அருணகிரிநாதர் திருவிழாவும் 05.09.2023 அன்று 13ஆவது திருவிழாவாக திருக்கார்த்திகை திருவிழாவும் 06.09.2023 அன்று 14ஆவது திருவிழாவாக சூரியோதய திருவிழாவும் 09.09.203 அன்று சந்தான கோபாலர் திருவிழாவாக மாலை திருக்கைலாச திருவிழாவும் 10.09.2023 வேல் விமானத் திருவிழாவும் 11.09.2023 அன்று தண்டாயுதபாணி உற்சவ திருவிழாவும் 12.09.2023 அன்று ஒருமுகத் திருவிழாவும் மாலை சப்பறத் திருவிழாவும் 13.09.2023 அன்று இரதோற்சவமும் 14.09 அன்று தீர்த்தோற்சவமும் நடைபெற்று, மாலை கொடியிறக்கத்துடன் இனிதே திருவிழா நிறைவடையும்.

நேற்றைய கொடியேற்ற உற்சவத்தில் பல பாகங்களில் இருந்து வருகை தந்த பக்தர்கள் பலரும் இஷ்டசித்திகளை பெற்றுச் சென்றனர்.

## சில பிரதேசங்களில் கடும் வெப்பம்!



நாட்டின் சில பிரதேசங்களில் இன்று (22) அதிக வெப்பத்துடனான கால நிலை நிலவுமென வளி மண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதற்கமைய, வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் கடுமையான வெப்பம் நிலவும் என்பதுடன் மனிதர்களால் உணரக்கூடிய வெப்பம் நிலவக்கூடும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த பிரதேசங்கள் அதிக எச்சரிக்கை நிறைந்த பிரதேசங்களாகவும் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்நிலைமை மக்களின் சுகாதார நிலைமைக்கு பாதிப்பு ஏற்படுத்தக்கூடும் என்பதுடன் போதியளவு நீரை அருந்துதல், அவசியமின்றி வெயிலில் நடமாடுவதை தவிர்த்தல் போன்ற ஆலோசனைகளை பின்பற்றுமாறும் நீண்டநாள் நோய்களினால் பாதிக்கப்பட்டவர்கள் மிக அவதானத்துடன் செயற்படுமாறும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# லாவோஸ் கென்சியூலர் - சபாநாயகர் சந்திப்பு



லாவோஸ் மக்கள் ஜனநாயகக் குடியரசின் இலங்கைக்கான கென்சியூலர் மனிலே திபலான்சி, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை அண்மையில் பாராளுமன்றத்தில் சந்தித்தார்.

இதன்போது, இரு நாடுகளுக்கும் இடையேயான உறவை மேம்படுத்துவது உள்ளிட்ட விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டன. குறிப்பாக இரு நாடுகளுக்குமிடையிலான பௌத்த கலாசார நிகழ்ச்சிகளை மேம்படுத்துவது மற்றும் சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

மேலும், லாவோஸ் மக்கள் குடியரசின் வணிகச் செயற்பாடுகள் குறித்தும், அந்நாட்டிலிருந்து ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யப்படும் பொருட்கள் மற்றும் சேவைகள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

அதேவேளை, லாவோஸ் மக்கள் குடியரசு சார்பில் இலங்கையின் ஒன்பதாவது பாராளுமன்றத்தில் இலங்கை-லாவோஸ் பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தை அமைப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இச்சந்திப்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் கலந்துகொண்டார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023 ஓகஸ்ட் 22ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# சீனக் கப்பல் விவகாரம்!

இலங்கைக்கு வருகை தரும் சீன ஆராய்ச்சிக் கப்பலான Xin Yan-6 குறித்து இந்தியா கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இதன் காரணமாக இந்தியா-சீனா மோதலில் இலங்கை அரசாங்கம் மீண்டும் தலையிட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவதானிகள் குறிப்பிடுகின்றனர். குறித்த சீனக் கப்பல் உளவுத்துறை தகவல்களைத் தேடும் திறன் கொண்ட கப்பல் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 25ஆம் திகதி சீனக் கடற்படையின் Xin Yan-6 என்ற ஆய்வுக் கப்பல், கொழும்பு துறைமுகத்துக்கு வரவுள்ளது.

17 நாட்கள் இலங்கை கடற்பரப்பில் தரித்து நின்று ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ள இந்தக் கப்பல், அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கும் செல்லும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.இதனை அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கும் அனுமதிக்குமாறு இலங்கையை சீனா கேட்டிருப்பதாக சொல்லப்படுகிறது.எனினும், அதற்கு இலங்கை இன்னும் பதிலளிக்கவில்லை.

சீன ஆய்வுக் கப்பலான Xin Yan-6 , ஒக்டோபர் 25ஆம் திகதி கொழும்பு வரும் என்றும், நாரா எனப்படும் தேசிய கடல் வளங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகாமையுடன் இணைந்து அது ஆய்வுகளை மேற்கொள்ளும் என்றும் கடந்த 16ஆம் திகதியே கடற்படைப் பேச்சாளர் கூறினார்.

ஆனால், ருகுணு பல்கலைக்கழகத்துடன் செய்துகொண்ட உடன்பாட்டுக்கமைய தங்களின் சொந்த ஆராய்ச்சிக்காக கடல்நீர் மாதிரிகளைப் பெறுவதற்காகவே சீனக் கப்பல் வருவதாக நாரா அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

இந்த ஆய்வின் போது சீன ஆய்வுக் கப்பலில் தங்களின் ஆய்வாளர்கள் இணைந்து பணியாற்றுவதற்கு அனுமதி கோரியதாகவும இதுவரை அந்த அனுமதி வழங்கப்படவில்லை என்றும் ருகுணு பல்கலைக்கழக சமுத்திரவியல் மற்றும் கடல் வளங்கள் துறை தெரிவித்துள்ளது.

சீன ஆய்வுக் கப்பலான Xin Yan-6 தொடர்ந்து 17 நாட்கள் இலங்கை கடற்பரப்பில் தரித்து நிற்பதை இந்தியா விரும்பவில்லை.இதுகுறித்து இந்தியா இராஜதந்திர ரீதியான எதிர்ப்பைப் பதிவுசெய்திருப்பதாக புதுடெல்லி செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த மாதம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து பேச்சு நடத்திய போது இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் மூலோபாய கவலைகளை இலங்கை அரசாங்கம் உணர்வுபூர்வமாக எடுத்துக்கொள்ளும் என்று உறுதியளித்திருந்தார்.இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலும் ஜனாதிபதி ரணிலுடனான சந்திப்பில் இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு ஊறு விளைவிக்கும் செயற்பாடுகளுக்கு இலங்கை செல்லக் கூடாதென வலியுறுத்தியிருந்தார்.

2014ஆம் ஆண்டு சீனாவின் நீர்மூழ்கிக் கப்பல் கொழும்பு துறைமுகத்தில் தரித்துச் சென்றதால் அப்போதைய மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துக்கும் புதுடெல்லிக்குமிடையில் இராஜதந்திர மோதல்கள் உருவாகின. அதனால் தான் 2015 ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடிக்க இந்தியா தனது புலனாய்வு அமைப்பின் ஊடாக அந்த வேலையை செய்தது என்ற விமர்சனங்கள் எழுந்திருந்தன.

அதற்குப் பின்னர் சீனாவின் நீர்மூழ்கிக் கப்பல்கள் இலங்கைக்கு வரவில்லை. நல்லாட்சி அரசின் காலத்தில் சீன நீர்மூழ்கிக் கப்பல் கொழும்பு துறைமுகத்துக்கு வர அனுமதி கோரியபோதும், ரணில் விக்கிரமசிங்க அதனை நிராகரித்து விட்டார்.

ஆனால், பின்னர் சீனாவின் செய்மதி மற்றும் ஏவுகணை வழித்தட கண்காணிப்புக் கப்பலான யுவான் வாங்-5 இந்தியாவின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் தரித்துச் சென்றது. அதற்குப் பின்னர் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் கடந்த ஒரு வருடமாக எந்தவொரு வெளிநாட்டுப் போர்க்கப்பலுக்கும் அரசாங்கம் அனுமதி அளிக்கவில்லை.

செய்மதி மற்றும் ஏவுகணை வழித்தட கண்காணிப்புக் கப்பலான யுவான் வாங் - 6 அம்பாந்தோட்டைக்கு வருகை தருவதற்கு அனுமதி கோரிய போதும், அது அரசாங்கத்தினால் நிராகரிக்கப்பட்டது.தற்போது சீனாவின் விசேட ஆய்வுக் கப்பல் கடந்த வாரம் கொழும்பு வந்து சென்ற நிலையில், மற்றொரு ஆய்வுக் கப்பல் ஒக்டோபரில் கொழும்பு வரவுள்ளது.

இந்தியப் பெருங்கடலில் சீனாவின் 25இற்கும் அதிகமான ஆய்வு மற்றும் கண்காணிப்புக் கப்பல்கள் தொடர்ச்சியாக நடமாடிக் கொண்டிருக்கின்றன.இவ்வாறான கப்பல்களால், தங்களின் பாதுகாப்புத் திட்டங்களுக்கு ஆபத்து ஏற்படும் என்று இந்தியா மாத்திரமல்ல, அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளும் அச்சம் கொண்டிருக்கின்றன.

கடந்த ஆண்டு யுவான் வாங் - 5 கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வந்த போது, ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம், பதவிக்கு வந்து ஒரு மாதமே ஆகியிருந்தது. அதற்கு முன்பிருந்த கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் அளித்த அனுமதியின் அடிப்படையில் தான், சீனக் கப்பலை அம்பாந்தோட்டையில் அனுமதித்ததாகவும், அதனை நிராகரித்தால் சீனா நெருக்கடி கொடுக்கும் என்றும் கூறி ரணில் அரசாங்கம் சமாளித்திருந்தது.

அதே ரணில் விக்கிரமசிங்க புதுடெல்லிக்குப் போய் இந்தியாவின் கரிசனைகளை உணர்வு பூர்வமாக அணுகுவதாக வாக்குறுதி கொடுத்துவிட்டு சீன ஆய்வுக் கப்பல்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறார்.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்திருப்பதால் சர்வதேச கப்பல் பாதையின் ஊடாக பயணிக்கும் கப்பல்கள் இலங்கைத் துறைமுகங்களை நாடுவது இயல்பு.ஆனால், சீனாவின் கப்பல்கள் அதுவும் தேசிய பாதுகாப்புக்கு சவால் விடும் வகையில் கப்பல்கள் இலங்கைக்குள் புக முயல்வது வியப்பைத் தருகிறது.

2020ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஓகஸ்ட் வரையான காலப்பகுதியில், 160 வெளிநாட்டுப் போர்க்கப்பல்களும் 5 ஆய்வுக் கப்பல்களும் இலங்கைத் துறைமுகங்களுக்கு வந்திருக்கின்றன.

கொழும்பு துறைமுகத்துக்கு 107 கப்பல்களும், திருகோணமலை துறைமுகத்துக்கு 35 கப்பல்களும், வந்திருக்கின்ற நிலையில், அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு குறித்த காலப்பகுதியில் 10 வெளிநாட்டுப் போர்க்கப்பல்கள் தான் வந்திருக்கின்றன.

இந்தக் காலகட்டத்தில் இலங்கைக்கு வந்த பெரும்பாலான போர்க்கப்பல்கள் இந்தியா மற்றும் ஜப்பானிய கடற்படைக்குச் சொந்தமானவை.ஆனால், இவற்றின் வருகையின் போதோ, அமெரிக்க, பிரெஞ்சு போர்க்கப்பல்களின் வருகையின் போதோ சர்ச்சைகள் உருவாகுவதில்லை.

கடந்த ஜூன் மாதம் இந்தியக் கடற்படையின் விகார் என்ற நீர்மூழ்கிக் கப்பல் கொழும்பில் தரித்துச் சென்றது. ஜப்பானிய கடற்படையின் நாசகாரி ஒன்று கொழும்பு துறைமுகத்தில் திருத்தப்பணிகளையும் மேற்கொண்டது. ஆனால், சீன கடற்படையின் நீர்மூழ்கிகள், ஆய்வுக் கப்பல்களை இந்தியா நெருங்கவிடாமல் தடுக்கப் பார்க்கிறது.

இலங்கை அரசாங்கம் இந்தியாவுக்கு வாலையும் சீனாவுக்கு தலையையும் காட்டும் போக்கைக் கடைப்பிடித்து வருவதால் இப்படியான நேரங்களில் சரியான முடிவை எடுக்க முடியாமல் தடுமாறுகிறது.இலங்கையின் உள்ளக விடயங்களில் தீர்மானம் எடுக்கும் அதிகாரங்கள் இலங்கை அரசிடம் இருக்க வேண்டுமென்றாலும் பிராந்திய அரசியலை , பிராந்திய நாடுகளின் நலன்களையும் இலங்கை கவனிக்க வேண்டும்.

## இன்றைய நாளில்...

- 1639 – பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியினர் நாயக்கர்களிடம் இருந்து வாங்கிய நிலத்தில் மதராஸ் நகரத்தை (தற்போதைய சென்னையை) அமைத்தார்கள்.
- 1872 – இலங்கையில் முதலாவது அஞ்சல் அட்டை வெளியிடப்பட்டது.
- 1932 – தொலைக்காட்சி சேவையை முதன் முதலாக பிபிசி சோதித்தது.
- 1989 – நெப்டியூனின் முதலாவது கோள் வலையம் கண்டுபிடிக்கப்பட்டது.
- 2006 – கிரிகோரி பெரல்மான் புவங்காரே அனுமானத்திற்கான நிறுவல்களைக் கண்டுபிடித்தமைக்காக அவருக்கு பீல்ட்ஸ் பதக்கம் அறிவிக்கப்பட்டது. எனினும், அவர் அப்பதக்கத்தைப் பெற மறுத்து விட்டார்.

# தீராத வலிகளும், தீர்வுகளும்!

நமது மூளையில் உற்பத்தியாகும் இரசாயனங்களின் விகித அளவு மாற்றங்களால் மன வலி உண்டாகிறது.

யாருக்கு மூளை அதிகமாக வேலை செய்கிறதோ அவர்களுக்கே இரைப்பையில் புண் ஏற்படுகிறது. நோய் வலியை உண்டாக்குகிறது. வலி என்பது நோய் குறித்து நாம் விழிப்புணர்வடையக் கொடுக்கும் அறிகுறி எனக் கருதலாம். நமது உடலில் ஏதோ ஒரு பிரச்சினை அல்லது உடல் பாகங்களில் ஏதோ ஒன்று சரியில்லை என்பதைத்தான் வலி நமக்கு உணர்த்துகிறது.

ஏ சிம்ப்டமெட்டிக் ஹார்ட் அட்டாக் போன்ற மாரடைப்புகளும், இன்னபிற வியாதிகளும் வலி இல்லாமலே ஏற்படும். உடலில் வலி ஏற்பட்டால்,
அதற்கு ஓய்வெடுப்பது மற்றும் மருந்துகள் உட்கொள்வதை நாம் ஒரு நிவாரண வழிமுறையாகக் கையாள்கிறோம். சில சமயங்களில் நம் உடலில் காயங்கள் அல்லது வியாதிகளால் அதீத வலி ஏற்படக்கூடும். நாட்பட்ட தீராத வயிற்றுவலி, மூட்டு வலி, தலைவலி உள்ளிட்ட பிரச்சினைகளால் தற்கொலை செய்து கொள்பவர்கள் ஏராளம்.


**இந்த வலிகள் குறித்தும், அதற்கான நிவாரண வழிகள் குறித்தும் பார்க்கலாம்.**

வலி என்பது 2 விதமாக இருக்கிறது. ஒன்று உடல் வலி. மற்றொன்று மனவலி. இருக்கக் கூடிய அனைத்து வலிகளிலும் மிகவும் மோசமான வலி எது என்று கேட்டால் அது மனவலியாகத்தான் இருக்கும். மன வலி என்பது மனச்சோர்வு அல்லது மன அழுத்தத்தால் ஏற்படும் ஒரு விளைவு. அதாவது, நமது மூளையில் உற்பத்தியாகும் இரசாயனங்களின் விகித அளவு மாற்றங்களால் மன வலி உண்டாகிறது. நமது உடலின் ஒரு பகுதியில் ஏற்படும் வலியை நமக்கு உணரச் செய்வதே இந்த மூளைதான். சிறியவர்கள் முதல் முதியவர்கள் வரை மனவலிக்கான காரணங்களைக் கண்டறிந்து, அதற்கேற்ப மன நல ஆலோசனைகள், மாத்திரைகள் உட்கொண்டு அதனைச் சரி செய்வதே சிறந்தது.

***வயிற்று வலி***

மனிதனாகிய நாம் வயிற்றுக்கான உணவை சரியான நேரத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி சரியான நேரத்தில் உணவை எடுத்துக்காள்ளவில்லையென்றால் வயிற்றில் வலி ஏற்படுகிறது. வயிற்று வலிக்கு முக்கியமாக இரைப்பையில் புண் மற்றும் பித்தப்பையில் கல் ஏற்படுவதே காரணம். வயிற்றில் ஓர் அமிலம் சுரக்கிறது. அந்த அமிலம் சாப்பாடு வருகிறதா என்று எட்டிப் பார்க்கிறது. அப்படி வரவில்லை என்றால் வயிற்றில் உள்ள உள் சுவர்களை அரித்து விடுகிறது. மேலும் வயிற்றையே செரிக்க ஆரம்பித்து விடுகிறது. இதனால் வயிறு புண்ணாகிப் போகிறது.

வலி எப்போது வருகிறது, எப்போது குறைகிறது என்று கேட்கலாம். சாப்பிட்டதும் வலி குறைகிறது. சாப்பிட்டு 6 மணி நேரம் கழித்து மீண்டும் வலி வருகிறது. அதாவது, ஆகாரம் வயிற்றுக்குள் போனால் வலி குறைகிறது. ஆகாரம் இல்லையென்றால் வலி எடுக்கிறது. இப்படி இருந்தால், இரைப்பையில் புண்(அல்சர்) ஏற்பட்டுள்ளது என்று அர்த்தம்.



சாதாரணமாக இந்தப் புண் ஆறாது. இதனைக் குணப்படுத்த எண்டாசின், சிமட்டின் உள்ளிட்ட மாத்திரைகள் எடுத்துக் கொண்டால் இந்த நோயைக் குணப்படுத்த முடியும். அல்லது ஆப்பரேஷன் செய்துகொள்ள வேண்டும். யாருக்கு மூளை அதிகமாக வேலை செய்கிறதோ அவர்களுக்கே இரைப்பையில் புண் ஏற்படுகிறது. தீராத வயிற்று வலியால் கணையத்தில் கூட கட்டி வரலாம். 100 மில்லி அமிலம் வரவேண்டிய இடத்தில் 1000 மில்லியாக வெளி வந்தால், இரைப்பை மட்டுமல்ல, குடல் முழுவதுமே புண் ஏற்படும். அதனைச் சரிசெய்ய சிமட்டின் மாத்திரைகள் அல்லது பான்கிரியாஸ் ஆப்பரேஷன் செய்துகொள்ள வேண்டும்.

இரைப்பையில் புண் வந்தது தெரிந்தால் கடையில் மருந்து வாங்கி சாப்பிடக்கூடாது. உடனே மருத்துவரை அணுகி ஆலோசனை பெறவேண்டும். இரைப்பை மற்றும் கல்லீரலுக்கு என்று நிபுணத்துவம் பெற்ற டாக்டர்களும் உள்ளனர். அவர்களைச் சந்தித்து சிகிச்சை பெற வேண்டும். அவர்கள் கூறும் மருந்து, மாத்திரைகளை எடுத்துக்கொண்டால் நாட்பட்ட வயிற்று வலியை சரிசெய்ய முடியும். தலைவலி, இடி இடித்தால் எப்படி சத்தம் வருகிறதோ, அதுபோன்ற சத்தம் நம் தலையில் இடித்துக்கொண்டிருந்தால் நம் தலையில் உள்ள இரத்தக்குழாய் உடைந்து விட்டது என்று அர்த்தம். மைக்ரேன், டென்ஷன் போன்ற காரணங்களால் நாட்பட்ட தலைவலி ஏற்படலாம். இதுவும், திடீரென தொடர்ச்சியாக வரக்கூடிய தலைவலியும் வேறு வேறு. இப்படிப்பட்ட பிரச்சினையை சந்திக்க நேரிடும். ஒருவருக்கு மூளையில் இரத்தக் கசிவு அல்லது அடைப்பு அல்லது ஏதேனும் கட்டி உருவாகி அதில் இரத்தக் கசிவு ஏற்பட்டுள்ளதா என்பது குறித்து பரிசோதனை மேற்கொண்டு அதற்கேற்ப சிகிச்சைகள் வழங்க வேண்டும். மற்றொன்று, முகத்தில் ஏற்படக்கூடிய மின்னல் வலி. பல் துலக்கும் போதும், சாப்பிடும் போதும், காற்று பட்டாலும், சிரித்தாலும் இந்த வலி ஏற்படும். இதனால் சில நோயாளிகள் சாப்பிடக்கூட முடியாமல் அவதியடைகின்றனர். முகத்திற்கு மேல் வரும் இரத்த நாளங்களில் அழுத்தம் ஏற்படும்போது இந்தப் பிரச்சினை ஏற்படுகிறது. இந்த வலியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருந்துகள் கொடுக்கப்படுகிறது.

அடுத்தகட்டமாக அறுவைச் சிகிச்சை அல்லது ரேடியோ ப்ரீக்வன்சி மூலமாக சிகிச்சை மேற்கொள்ளலாம். முதுகு மற்றும் கழுத்து வலி வராமல் இருக்க தினமும் உடற்பயிற்சி மேற்கொள்ள வேண்டும். தசைகளுக்கு அதிகமாக அழுத்தம் கொடுக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். தினமும் 20 நிமிடங்களாவது நடைப்பயிற்சி மேற்கொள்ள வேண்டும். வீட்டின் அருகில் உள்ள கடைக்குச் செல்வதற்குக்கூட வாகனத்தின் உதவியை நாடிச் செல்ல வேண்டாம், ஒரு சிறிய நடைப்பயிற்சி செய்யலாம். பொதுவாக, நேரத்தைக் காரணம் காட்டி முதலில் நாம் தவிர்ப்பது உடற்பயிற்சியைத்தான். எனவே, நேரம் இல்லை என்று கூறி தியானம் மற்றும் உடற்பயிற்சியை உங்கள் வாழ்வில் இருந்து ஒதுக்க வேண்டாம். டி.வி. மற்றும் செல்போனில் மூழ்கி இருக்கும் நேரத்தை சற்று தவிர்த்தாலே தினமும் உடற்பயிற்சி செய்துவிட முடியும்.

மூட்டு வலி பலரையும் வாட்டி வதைக்கிறது. வயதானவர்களுக்கு மூட்டு வலி வருவதற்குக் காரணம், எலும்புத் தேய்மானம், வயது முதுமை. இளம் வயதில் மூட்டு வலி வருவதற்கு காரணம், இளம்பெண்கள் ஹை-ஹீல்ஸ் அணிந்து நடப்பது தெரியாமல் செய்வது போன்றவையாகும். இதுபோன்ற காரணங்களால் மூட்டு வலி அதிகமாக வருகிறது. நாட்பட்ட வலிக்கும் சாதாரண வலிக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. ஒருவருக்கு காலில் அடிபட்டால் சிகிச்சை எடுத்த பின்பு அந்த இடத்தில் வரக்கூடிய வலி சாதாரணமானது. இதைவிட மிகவும் மோசமானது, suicide tendency வலி ஆகும். இது, தொடர்ந்து ஏற்படும் வலியின் இன்னல்கள் காரணமாக ஒருவருக்குத் தற்கொலை செய்யும் எண்ணத்தைத் தூண்டும். அந்த அளவிற்கு இந்த வலி தொடர்ந்துகொண்டே இருக்கும்.

எனவே, இதுபோன்ற வலி உள்ளவர்களுக்கு எக்ஸ்ரே, ஸ்கேன் போன்றவற்றை எடுத்துப் பார்த்து, பின்னர் அவர்களுக்கு எந்தப் பகுதியில் வலி இருக்கிறதோ அந்தப் பகுதியில் PRP (Platelet-Rich Plasma) எனும் பரிசோதனை செய்யப்படும். இந்தப் பரிசோதனை மூலம், அவர்களுடைய இரத்தத்தை எடுத்து, சிவப்பு இரத்த அணுக்கள் வெள்ளை இரத்த அணுக்கள் மற்றும் பிளேட்லெட்டுகளிலிருந்து பிரித்த பின்பு, அந்த பிளேட்லெட் மீண்டும் ஊசி மூலமாக வலியுள்ள இடத்தில் செலுத்தும்பொழுது அவர்களுக்குப் பூரண வலி நிவாரணம் ஏற்படுகிறது. எப்படியெனில், ஊசி செலுத்தும்போது அவர்களுக்கு அந்தப் பகுதியில் புதிய செல்கள் உருவாகின்றன. அதனால் அவர்கள் குணமடைகின்றனர். தோள்பட்டை மற்றும் முதுகுத் தண்டுவடத்தில் ஏற்படக்கூடிய வலிகளுக்கும் எளிமையான மருத்துவம் உள்ளது. எந்தப் பகுதியில் வலி இருக்கிறதோ அதே பகுதியில் ஊசி மூலமாக மருந்து செலுத்தி வலியைக் குணப்படுத்தலாம். அதனால் நீண்ட நாள் வலிகள் இருப்பவர்கள், நமக்கு நிரந்தரத் தீர்வு இல்லையே என வருந்தத் தேவையில்லை.

வலி நிவாரண சிகிச்சை என்பது உடல் உறுப்புகளில் ஏற்படும் நாட்பட்ட வலிகளுக்கு மட்டும் அல்ல. மிக சவாலான அறுவைச்சிகிச்சைக்குப் பிறகு நோயாளியின் மனப் பயத்தைப் போக்கி இயன்முறை மருத்துவம் செய்துகொள்ள உதவும் வகையில் வலி நிவாரண சிகிச்சையானது, தற்போதைய நவீன மருத்துவத்தில் ஓர் இணை உதவி மருத்துவமாகப் பயன்படுத்தப்படுகிறது. மக்கள் எந்த வலி வந்தாலும் உடனே மருத்துவரை அணுகி உரிய சிகிச்சை எடுத்துக் கொண்டால் சிறப்பான வாழ்க்கை வாழலாம்.

***நன்றி - மாலைமலர்***

# லூனா-25 தோல்வி: நிலவில் தரையிறங்குவது பற்றி என்ன சொல்கிறது?

நிலவின் தென் துருவத்தை ஆய்வு செய்வதற்காக அனுப்பப்பட்ட ரஷ்யாவின் லூனா-25 விண்கலம் தரையிறங்குவதற்கு முன் (ஓகஸ்ட் 20) நிலவில் விழுந்து நொருங்கியது. கிட்டத்தட்ட 47 ஆண்டுகளுக்குப் பின் ரஷ்யா நிலவுப் பயணத்தை மேற்கொண்டது. நவீன ரஷ்யாவின் முதல் முயற்சி தோல்வியடைந்தது.

விண்கலம் நிலவின் மேற்பரப்பில் மோதி தோல்வியில் முடிந்தது என்று ரஷ்ய விண்வெளி நிறுவனம் ரோஸ்கோஸ்மோஸ் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தது. இந்தத் தோல்வியின் மூலம் நிலவில் விண்கலன்களை மெதுவாகத் தரையிறக்குவதில் உள்ள சிக்கலை மீண்டும் எடுத்துக் காட்டுகிறது.

மனிதர்களை விண்வெளிக்கு கொண்டுசென்றது உட்பட 20 முறைகளுக்கு மேல் வெற்றிகரமாகத் தரையிறக்கம் செய்யப்பட்டிருந்தாலும், நிலவில் தரையிறங்குவது குறித்தான தொழில்நுட்பம் இன்னும் தெளிவாகத் தேர்வு செய்யப்படவில்லை.

ஆச்சரியப்படும் விதமாக, கடந்த 10 ஆண்டுகளில் மூன்று சீன தரையிறக்கங்களைத் தவிர, சந்திரனில் அனைத்து வெற்றிகரமான தரையிறக்கங்களும் 1966 மற்றும் 1976 க்கிடையில் ஒரு பத்தாண்டுகளுக்குள் நிகழ்ந்தன.

***திக் திக் 15 நிமிடங்கள்***

2019 ஆம் ஆண்டு சந்திரயான்-2 ஏவுதலுக்கு முன்னதாக, இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பின் முன்னாள் (இஸ்ரோ) தலைவர் கே. சிவன், தரையிறங்குவதற்கான இறுதிக் கட்டத்தை “15 நிமிட பயங்கரம்” என்று குறிப்பிட்டார்.

இந்தக் கருத்து நிலவின் சுற்றுப்பாதையில் இருந்து நிலவின் மேற்பரப்பில் இறங்குவதில் உள்ள சிக்கலின் சாரத்தைக் குறிக்கிறது. இது தான் நிலவுப் பயணத்தின் மிகவும் கடினமான பகுதியாகும் - என்றார்.

கடந்த நான்கு ஆண்டுகளில் இந்தியா, இஸ்ரேல், ஜப்பான் மற்றும் இப்போது ரஷ்யா ஆகிய நான்கு நாடுகளைச் சேர்ந்த அரசு மற்றும் தனியார் விண்வெளி நிறுவனங்கள் சந்திரனில் தங்கள் விண்கலத்தைத் தரையிறக்க முயற்சித்து தோல்வியடைந்தன. இந்தப் பயணங்கள் ஒவ்வொன்றும் கடைசிக் கட்டத்தில் – தரையிறங்கும் செயற்பாட்டின்போது – மற்றும் சந்திரனின் மேற்பரப்பில் செயலிழந்தன என்றார்.

லூனா-25- விண்கலத்தில் ஏற்பட்ட சிக்கல் இன்னும் தெளிவாக அறியப்படவில்லை, இருப்பினும், ரோஸ்கோஸ்மோஸின் அறிக்கை, விண்கலம் தரையிறங்குவதற்கு முந்தைய சுற்றுப்பாதையில் நகரும்போது ஏற்பட்ட பாதை மாற்றுக் கோளாறில் நிகழ்ந்திருக்கலாம் என்று கூறியது.

**மற்ற மூன்று திட்டங்கள்**

இஸ்ரோவின் சந்திரயான்-2, இஸ்ரேலின் பெரேஷீட் மற்றும் ஜப்பானில் ஹகுடோ-ஆர் ஆகியவை பல்வேறு வகையான பிரச்சினைகள் ஏற்பட்டு நிர்ணயிக்கப்பட்ட வேகத்தில் இருந்து மாறுபட்டு செயலிழந்தன என்றார்.

சீனா 2013 இல் Chang'e-3 மூலம் தனது முதல் நிலவுப் பயணத்தில் வெற்றிகண்டது. 2019இல் Chang'e-4 மற்றும் 2020இல் மாதிரி திரும்பும் பணி ஆகிய 3 பயணங்களிலும் வெற்றி சாதனை படைத்தது.

முயற்சித்து தோல்வியடைந்த நாடுகளில், இந்தியா மட்டுமே இரண்டாவது முயற்சியில் ஈடுபட்டுள்ளது. தன் முந்தைய தோல்வியிலிருந்து கற்றுக்கொண்டு, சந்திரயான்-3 இல் பல பாதுகாப்பு அம்சங்களை இணைத்து, தற்போது நிலவின் தரையிறங்குவதற்கான இறுதிக் கட்டப் பயணத்தில் உள்ளது.

***முந்தைய பயணங்கள்***

அரை நூற்றாண்டுக்கு முன்னர் பல சந்தர்ப்பங்களில் நிரூபிக்கப்பட்ட தொழில்நுட்பத் திறன் இன்றும் மிகவும் மேம்பட்ட விண்வெளி ஏஜென்சிகளில் சிலவற்றைத் தொடர்வது



விசித்திரமாகத் தோன்றலாம். இருப்பினும், தரையிறங்கும் தொழில்நுட்பம் அப்போதும் தேர்ச்சி பெறவில்லை. அந்த நேரத்தில் மிக அதிகமான தோல்வி விகிதத்திலிருந்து இது தெளிவாகிறது.

1963 மற்றும் 1976 இற்கிடையில் நிலவில் தரையிறங்குவதற்கான 42 முயற்சிகளில் 21 மட்டுமே வெற்றி பெற்றன.

50 சதவிகிதம் வெற்றி விகிதத்தைக் கொடுத்தது. அந்த நேரத்தில் சந்திரனுக்குச் செல்வதற்கான உந்துதல்கள் மிகவும் வேறுபட்டவை. இது முக்கியமாக பனிப்போர் போட்டி, மற்றும் புவிசார் அரசியல் அனுகூலத்தைப் பெறுவதற்கானவையாக இருந்தன. அதுதான் அமெரிக்காவையும் முந்தைய சோவியத் யூனியனையும் இந்த சந்திர பயணங்களை அனுப்பத் தூண்டியது. அவை ஆபத்தானவை; மிகவும் விலை உயர்ந்தவை; மற்றும் ஆற்றல் நிறைந்தவை. ஆனால், இவற்றில் சில பெருமளவில் வெற்றி பெற்றன. இது அறிவியல் வரலாற்றில் புதிய சாதனைகளைப் படைத்தன.

சந்திரயான்-1இன் முக்கிய நபர்களில் ஒருவரான மயில்சாமி அண்ணாத்துரை கூறுகையில், தற்போதைய நிலவு பயணங்களில் ஏற்படக்கூடிய சிக்கல்கள் முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும். இவை அப்பணிகளுக்குச் செய்யக் கூடிய செலவுகளைக் கூட நியாயப்படுத்த முடியாது.

மேலும், தற்போதைய நிலவுப் பயணங்களுக்கு பயன்படுத்தப்படும் தொழில்நுட்பங்கள் மிகவும் வேறுபட்டவை. அவை பாதுகாப்பானவை; மலிவானவை; மற்றும் அதிக எரிபொருள் திறன் கொண்டவை. ஆனால், 1960 கள் மற்றும் 1970களில் பயன்படுத்தப்பட்டவற்றுடன் இவற்றை ஒப்பிட முடியாது. அவைகள் இப்போதுதான் சோதனை செய்யப்பட்டு வருகின்றன.

அதனால்தான், சந்திரனில் ஆறு பேர் கொண்ட பயணங்களை தரையிறக்கிய அமெரிக்கா கூட, தற்போதைய நிலவுப் பயணங்களில் கிட்டத்தட்ட புதிதாக – ஆர்பிட்டர்களை அனுப்புவதன் மூலம் – தொடங்கியுள்ளது. ஏன் நிலவில் மனிதர்களைத் தரையிறக்கிய அமெரிக்கா கூட, ஆர்ட்டெமிஸ் திட்டத்தின் மூலம் நேரடியாக மனிதர்களை அனுப்பத் தொடங்கவில்லை. ஆர்ட்டெமிஸ்-3 பயணத்தில் மட்டுமே மனிதர்களை அனுப்ப உள்ளது.

***லூனா பயணங்களின் எதிர்காலம்***

லூனா -25 திட்டம் நிலவு ஆய்வு மீதான ரஷ்ய ஆர்வத்தை மீண்டும் தொடங்குவதாகும். 50 ஆண்டுகளுக்கு முன்பு அப்போதைய சோவியத் யூனியன் நிலவுப் பயணங்களுக்குப் பயன்படுத்திய லூனா சீரியஸ் பெயரை குறிக்கும் வகையில் இது பெயரிடப்பட்டது. 1976 இல் ஏவப்பட்ட லூனா-24, சந்திரனின் மேற்பரப்பில் தரையிறங்கிய கடைசி விண்கலம் ஆகும். சந்திர பயணங்கள் திடீரென அப்படியே நிறுத்தப்பட்டன. கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்களாக இடைநிறுத்தப்பட்டன.

லூனா-25 தொடர்ந்து இன்னும் அதிகமான சந்திரப் பயணங்கள் இருப்பதாக ரஷ்யா ஏற்கனவே அறிவித்துள்ளது. லூனா திட்டத்தில் இந்த 10 ஆண்டுகளில் 3 திட்டங்களை ரஷ்யா திட்டமிட்டுள்ளது.

## நக்கல் நமசிவாயம்

**உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு சிங்கப்பூர் போயிருக்கார் ரணில்.. சிங்கப்பூருக்கு மருந்து எடுக்கப் போகாமல் ஒப்பீஷியல் வேலையா போன அரசியல்வாதி இவர் மட்டும்தான் போல...**



# நீரிழிவால் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு புற்றுநோய் மாத்திரைகளை வழங்கியதால் உயிரிழப்பு

## கணவர் இங்கிரிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட தனது மனைவிக்கு, தவறுதலாக புற்றுநோய்க்கான மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அதன் காரணமாகவே தனது மனைவி உயிரிழந்துள்ளதாகவும் நபரொருவர் முறைப்பாடு செய்துள்ளதாக இங்கிரிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இங்கிரிய, உறுகல பகுதியைச் சேர்ந்த 62 வயதுடைய பி.எம்.சோமாவதி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதுடன் இவர் மூன்று பிள்ளைகளின் தாயென்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

உயிரிழந்த பெண்ணின் கணவரான டபிள்யூ. லீலாரத்ன என்பவர், தனது மனைவியின் நோய் தொடர்பில் அறிக்கையிடும் புத்தகத்தை ஜூலை 31ஆம் திகதி ஹொரணை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றதாகவும் அவருக்கு தேவையான மருந்துகளை வைத்தியர் நோயறிதல் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நோய் தொடர்பில் அறிக்கையிடும் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று மருந்துகளும் வைத்தியசாலையில் கிடைக்காத காரணத்தினால், இங்கிரிய நகரில் உள்ள மருந்துக் கடையொன்றில் இருந்து கொள்வனவு செய்துள்ளார்.

சுமார் ஒரு வாரம் மருந்தை உட்கொண்ட பின்னர், இறந்த பெண்ணுக்கு எழுந்திருப்பதில் சிரமம், உடல் வலி, கவனக்குறைவு, சிறுநீர் கழித்தல் குறைதல், கால் மற்றும் வாயில் கொப்புளங்கள் போன்ற பல சிக்கல்கள் ஏற்பட்டன. இதனால் அவர் இங்கிரிய மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுமார் இரண்டு நாட்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றும் குணமடையாததால் உடல்நிலை பாதிக்கப்பட்டது. எனவே, அவரை அம்பியூலன்ஸ் மூலம் ஹொரணைஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

ஹொரணை வைத்தியசாலையின் 8ஆம் வார்டில் அவர் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த போது, தாதி ஒருவர் அவர் உட்கொண்ட மருந்துகளை பரிசோதித்து, அவர் உட்கொண்ட மருந்துகளில் ஒன்று (மெத்தோட்ரெக்ஸேட்) புற்றுநோயாளிகளுக்கு பரிந்துரைக்கப்படுவதாக தெரிவித்தார்.

புற்றுநோயாளிகளுக்கு வாரத்துக்கு ஒரு முறை மட்டுமே அந்த மருந்து வழங்கப்படுவதாகவும் ஆனால் உயிரிழந்த பெண்ணுக்கு வழங்கப்பட்ட அந்த மருந்து அடங்கிய பாக்கெட்டில் உள்ள குறிப்புகள் நோயாளியை தினமும் உட்கொள்ள அறிவுறுத்துவதாகவும் தெரியவந்துள்ளது. மேலும், ஆட்டோ இம்யூன் நோய் உள்ளவர்களுக்கும் அவர்களின் உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை குறைக்க மருந்து கொடுக்கப்படுகிறது என்பது தெரியவந்தது.

கடந்த 12ஆம் திகதி முதல் 19ஆம் திகதி காலை வரை 07 நாட்களாக சிகிச்சை பெற்று வந்த போதிலும், உடல்நிலையில் முன்னேற்றம் இன்றி சனிக்கிழமை (19) காலை உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் கணவர் இங்கிரிய நகரில் உள்ள மருந்தகம் மூலம் நோய் தொடர்பில் அறிக்கையிடும் புத்தகம் மற்றும் மருந்துகளுடன் இங்கிரிய பொலிஸாரிடம் வந்து கவனயீனம் குறித்து முறைப்பாடு செய்துள்ளார்.

# செப்டெம்பரில் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு இடம்பெறுமென அரசாங்கம் நம்பிக்கை



## இல்லையேல் நாட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாகும் என்கிறார் அமைச்சர் பந்துல

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது கண்காணிப்பு விஜயம் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் இடம்பெறவுள்ளது. எனவே, இதன்போது வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு அடுத்த மாதத்தில் இடம்பெறும் என்றே அரசாங்கம் நம்பியுள்ளது. அவ்வாறு வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு இடம்பெற்றால் மாத்திரமே நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்க முடியும் என்று போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.


ஹோமாகம வைத்தியசாலையில் நேற்று (21) இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், நாட்டை விட்டு வெளியேறாமல் சேவையாற்றிக்கொண்டிருக்கும் வைத்தியர்களும் நாட்டில் இருக்கிறார்கள். அதனால், வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுவது தொடர்பில் அரசாங்கத்தால் எந்த நடவடிக்கையும் எடுக்கமுடியாது. அவர்களுக்கு தடை விதிக்கவும் முடியாது. அவ்வாறு செல்வோரை தடுத்து வைக்க, சுகாதார அமைச்சர் அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை முன்வைப்பார். வாழ்வதற்கு விரும்பும் நாடாக இலங்கையை மாற்றியமைக்க அவர்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

உலக நாடுகளில் எமது நாட்டில் மாத்திரமே இலவச வைத்திய கல்வி வழங்கப்படுகின்றது. பொதுமக்களின் வரிப் பணத்தைக் கொண்டே அந்த கல்வி பெற்றுக்கொடுக்கப்படுகின்றது. எனவே, அதனை முடிந்தளவு பயன்படுத்தி நாட்டு மக்களுக்கு பரந்துபட்ட சேவையை வழங்க வேண்டும் என்பதே எங்களின் கோரிக்கையாகும்.

சர்வதே நாணய நிதியத்தின் இரண்டாவது காண்காணிப்பு விஜயம் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் இடம்பெறவுள்ளது. முதலாவது கண்காணிப்பு விஜயத்தின்போது வழங்கப்பட்ட பரிந்துரைகளின் பிரகாரம் நாம் செயற்பட்டுள்ளோமா என்பது தொடர்பில் கணிக்காணிப்புகளை மேற்கொள்ளும் வகையிலேயே இந்த விஜயம் இடம்பெறும். ஆகவே, செப்டெம்பர் மாதத்தில் கடன் மறுசீரமைப்பு இடம்பெறுமென்று நம்புகிறோம். அவ்வாறு கடன் மறுசீரமைப்பொன்று இடம் பெற்றாமல் மாத்திரமே நாட்டுக்கு எதிர்காலம் என்றவொன்று இருக்கும் என்றார்.

## பரந்தனில் வெடிபொருள் மீட்புப் பணியில் விசேட அதிரடிப்படையினர்



பரந்தனில் வெடிபொருட்கள் மீட்பில் விசேட அதிரடிப்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

காணி உரிமையாளர்களால் கிணறு துப்புரவு செய்யும் பொழுது பல்வேறு வகையான வெடி பொருட்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.


இந்நிலையில், கிணற்றிலிருந்து வெடிபொருட்கள் அப்புறப்படுத்தப்பட்டிருந்த நிலையில் கிளிநொச்சி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று நேரில் பார்வையிட்ட பின்னர் நேற்று (21) நீதிமன்ற அனுமதியுடன் சிறப்பு அதிரடிப் படையினரால் கிணற்றிலிருந்து வெடி பொருட்களை மீட்கும் அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பல்வேறு வகையான வெடிக்காத வெடி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக சிறப்பு அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

# இந்திய சிறைச்சாலையில் குண்டுவெடிப்பை மேற்கொண்டு தப்பிச்சென்ற குடு சித்திக் அபுதாபியில் கைது

## கனேமுல்ல சஞ்சீவ உள்ளிட்ட இருவர் இந்தியாவில் கைதாகியுள்ளதாக புலனாய்வுப் பிரிவு தகவல்



குடு சித்திக் | கொத்த அசங்க | கனேமுல்ல சஞ்சீவ

இந்தியாவின் சிறைச்சாலையொன்றில் குண்டுத்தாக்குதல் மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றிருந்த, சர்வதேச போதைப்பொருள் கடத்தல் வலையமைப்புடன் தொடர்புடையவர் என்று குறிப்பிடப்படும் இலங்கையரான குடு சித்திக் என்றழைக்கப்படும் மொஹமட் சித்திக், அபுதாபியில் வைத்து அந்த நாட்டின் குடிவரவு குடியகல்வு அதிகாரிகளினால் கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளதாக புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

போலிக் கடவுச்சீட்டை வைத்திருந்த குற்றச் சாட்டிலேயே இவர் சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவே தகவல்கள் தெரிவிப்பதாக புலனாய்வுப் பிரிவு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போதைப்பொருள் வலையமைப்பொன்றை முன்னெடுத்து வந்திருந்த நிலையில், அவர் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் இரகசியமாக தலைமன்னாரிலிருந்து படகினூடாக தமிழ்நாட்டுக்குச் சென்றுள்ளதாக பாதாள குழு ஒழிப்பு செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவைச் சேர்ந்த சட்டத்தரணியொருவரை கொலை செய்ததாக தெரிவிக்கப்படும் சம்பவம் தொடர்பில், குடு சித்திக் உள்ளிட்ட நால்வர் தமிழ்நாட்டு பொலிஸாரினால் சில வருடங்களுக்கு முன்னர் கைதுசெய்யப்பட்டிருந்ததாக புலனாய்வுப் பிரிவு தகவல்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட குடு சித்திக் உள்ளிட்ட நால்வர் அந்நாட்டு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், சிறைச்சாலையில் குண்டுத்தாக்குதலை முன்னெடுத்துவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றிருந்ததாகவும் புலனாய்வு தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறைச்சாலையில் குண்டு வெடிப்பை மேற்கொண்ட குடு சித்திக் என்பவருடன் தப்பிச் சென்ற ஏனைய மூவர் இதற்கு முன்னர் இந்திய பாதுகாப்பு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டிருந்தாலும் குடு சித்திக் என்பவரை மாத்திரம் கைதுசெய்ய முடியாதிருந்ததாக புலனாய்வுப் பிரிவு தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இந்நிலையில், குடு சித்திக்கை கைதுசெய்வதற்கான இந்திய அதிகாரிகள் சர்வதேச மட்டத்தில் சிவப்பு எச்சரிக்கையும் பெற்றுக்கொண்டுள்ளனர்.

அபுதாபி இராச்சியத்தில் வைத்து கைதுசெய்யப்பட்ட குடு சித்திக் என்பவரை, இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளதாகவும் பிரத்தியேக தகவல் வட்டாரங்கள் உறுதிப்படுத்தியதாக புலனாய்வுப் பிரிவு தகவல்கள் தெரிவிக்கின்றன. சிக்கித் என்பவர் அபுதாபியில் வைத்து கைதுசெய்யப்பட்டமையை பொலிஸ் தலைமையகத்தின் பொறுப்புடைய அதிகாரியொருவர் உறுதிபடுத்தியுள்ளார்.

இதேவேளை, பாதாள உலகத்தின் முக்கிய புள்ளியாக கருதப்படும் கனேமுல்ல சஞ்சீவ மற்றும் அவரின் பிரதான சகாவாக கருதப்படும் கொத்த அசங்க ஆகியோர் இந்தியாவில் வைத்து அந்நாட்டு பாதுகாப்பு அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகிவருவதாக இலங்கை புலனாய்வுப் பிரிவின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் இருவரை கைதுசெய்வதற்காக பாதாள குழு ஒழிப்பு செயற்பாடுகளில் ஈடுபடும் பொலிஸாரினால் தேடப்பட்டு வந்தநிலையில், 2018ஆம் ஆண்டு மன்னாரிலிருந்து படகினூடாக இந்தியாவுக்கு தப்பிச் சென்றிருந்ததாக புலனாய்வுப் பிரிவு தகவல்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தியாவுக்கு தப்பிச் சென்ற கனேமுல்ல சஞ்சீவ என்பவர் அவரின் சகாவான கொத்த அசங்கவுடன் இணைந்து இலங்கையிலிருந்து அவர்களின் சகாக்களினூடாக போதைப்பொருள் வர்த்தகம், கப்பம் கோருதல் மற்றும் கொலைகள் என்பவற்றை முன்னெடுத்துள்ளதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும், இந்திய பாதுகாப்புப் பிரிவினரால் எதற்காக கைதுசெய்யப்பட்டார்கள் என்பது தொடர்பில் இதுவரையில் தகவல்கள் உறுதிப்படுத்தவில்லை என்று புலனாய்வுப் பிரிவு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களை கைதுசெய்துவிட்டதாக உத்தியோகபூர்வ தகவல்கள் கிடைக்கவில்லை என்று பொலிஸ் தலைமையக உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். இவர்களை கைதுசெய்துவிட்டதான தகவல்கள் வெளியிடப்பட்டுவருவதாக பொலிஸ் தலைமையகம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

# பல நாள் மீன்பிடிப் படகு தலைவரின் கொலை விவகாரத்தில் கடற்படை சிப்பாய் கைது!

தங்காலை, குடாவெல்லவில் அண்மையில் பல நாள் மீன்பிடி படகு தலைவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில், சந்தேகத்தின் அடிப்படையில் கடற்படையில் பணியாற்றும் நபரொருவர் நேற்று முன்தினம் (20) பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பலப்பிட்டியைச் சேர்ந்த இவர், திருகோணமலை, புல்மோட்டை பிரதேசத்தில் பணிபுரிந்து வருபவர் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தற்போது டுபாயில் இருக்கும் தில்ஷான் என்றழைக்கப்படும் போதைப்பொருள் வியாபாரியால் இந்த கடற்படை வீரருக்கு கொடுக்கப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. தில்ஷான் என்பவர், தென்னிலங்கையின் பிரபல போதைப்பொருள் வியாபாரியான ரத்கம விதுரவின் நெருங்கிய நண்பர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டு சம்பவம் இடம்பெற்றபோது, குறித்த கடற்படை வீரர் விடுமுறையில் இருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 15ஆம் திகதி மாலை, நெடுஞ்சாலையின் தொடங்கொட வெளியேறும் பகுதியில் வேகன்ஆர் காரில் பயணித்த ஒருவர் சிறப்பு அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், துப்பாக்கிச் சூடு நடத்தியவர் பலபிட்டியவில் உள்ள அவரது வீட்டிலிருந்து இந்த வேகன்ஆர் காரில் தங்காலைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் விசாரணையில் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர் தங்காலையில் இருந்து மோட்டார் சைக்கிளில் ஏறி குடாவெல்ல நோக்கி பயணித்துள்ளார்.

மோட்டார் சைக்கிளை வெலிகம பகுதியைச் சேர்ந்த ஒருவரே ஓட்டிச் சென்றுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. கொலை செய்யப்படுவதற்கு முந்தைய நாள் துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கான துப்பாக்கி கிடைத்ததாக குறித்த கடற்படை வீரர் தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிச் சூடு முடிந்து பலப்பிட்டிக்கு வந்த போது தில்ஷான் தன்னை அழைத்து பலப்பிட்டியில் உள்ள மின்கம்பத்துக்கு அருகில் துப்பாக்கியை விட்டுச் செல்லுமாறு கூறியதாகவும் அதன் பிரகாரம் ஆயுதத்தை அங்கேயே விட்டுச் சென்றதாகவும் அவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

கொலை செய்யப்பட்ட இளைஞருக்கு பாகிஸ்தானில் இருந்து கடல் மார்க்கமாக போதைப்பொருள் கொண்டு வருமாறு போதைப்பொருள் கடத்தல்காரர்களிடம் இருந்து பல தடவைகள் அழைப்பு வந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. ஆனால் அவர் அந்த அழைப்புகளை நிராகரித்துள்ளமை தெரியவந்துள்ளது.

# வறட்சியால் நீருக்கு திண்டாடும் உயிரினங்கள்

நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக நீர் நிலைகள் மற்றும் குளங்கள், ஆறுகள் ஆகிவற்றின் நீர்மட்டம் குறைந்துள்ளது. குறிப்பாக, ஊவா மாகாணத்தில் நிலவி வரும் வறட்சியினால் இங்குள்ள குளங்கள், ஏரிகள், நீர் நிலைகள், கால்வாய்கள், ஓடைகள், நீர் வீழ்ச்சிகள் என பலதிலும் நீர் மட்டம் வெகுவாக குறைந்துள்ளது.

இதன் காரணமாக, காட்டில் வாழும் உயிரினங்கள் நீர் தேடி ஊருக்குள் புகுவதாக எல்லைப் புறவாசிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக யால, கதிர்காமம், வெள்ளவாய, கொஸ்லந்த, பண்டார எலிய, ஹல்துமுல்ல, ஆலட்டு தென்ன, மரியறாவ, மஹியங்கனை போன்ற பிரதேசங்களில் இவ்வாறு காட்டு மிருகங்கள் ஊருக்குள் புகுவதாக பிரதேச வாசிகள் மேலும் தெரிவித்தனர்.

# வாகன விபத்தில் ஒருவர் பலி

பாணந்துறை நகரின் மத்தியிலுள்ள பாதசாரி கடவையில் நேற்று (21) இடம்பெற்ற வாகன விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதசாரி கடவையினூடாக வீதியைக் கடக்க முயற்சித்த போதே, அவர் மீது வாகனம் மோதியுள் ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

பாணந்துறை, பெக்கேகம பகுதியைச் சேர்ந்த 60 வயதுடைய ஸ்வர்ண ஹேமமாலா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண் பாணந்துறை நீதிமன்றத்தில் பணியாளராக இருந்ததாகவும் கூறப்படுகிறது. விபத்துடன் தொடர்புடைய வாகனம் தப்பிச் சென்றுள்ளதாகவும் சாரதியை கைது செய்வதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (21.08.2023)

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 201.4148 | 212.5240 |
| கனேடியன் டொலர் | 232.8384 | 244.4709 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 42.9569 | 45.6335 |
| யூரோ | 343.2621 | 359.9156 |
| ஜப்பான் யென் | 2.1706 | 2.2735 |
| சிங்கப்பூர் டொலர் | 232.0976 | 243.8268 |
| ஸ்ரேலிங் பவுன் | 402.1848 | 420.7459 |
| சுவிஸ் பிரான்ங் | 356.2419 | 375.8292 |
| ஐ.அ. டொலர் | 316.7286 | 329.5970 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 857.4548 |
| குவைட் | குவைட் தினார் | 1,050.2011 |
| ஓமான் | ஓமான் றியால் | 839.6480 |
| கட்டார் | கட்டார் றியால் | 88.6788 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 86.1936 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 88.0100 |

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை 2023.08.20
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5212 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 21,679,728.00
ஆங்கில எழுத்து E — வெற்றி இலக்கங்கள் 4 0 4 4 5 0

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3454 — சீட்டிழுப்பு திகதி 2023.08.20 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 73,702,788.80
ஆங்கில எழுத்து Y — வெற்றி இலக்கங்கள் 37 46 47 75 — விசேட எழுத்து Y — இலட்சாதிபதி பவர் சான்ஸ் வெற்றி இலக்கம் 79746

Lucky 7 — திகதி 20.08.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0038 — வெற்றி இலக்கினம் மீனம் — L7 இலக்கம் 0 8 — வெற்றி இலக்கங்கள் 2 0 7 6 7 1 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தன நிதானய — தேதி 2023/08/20 — சீட்டிழுப்பு இலக்கம் 1242 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 105,849,301.60
ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 11 30 44 69 — விசேட ஆங்கில எழுத்து U — Double Chance இலக்கம் 40544

ராசிசுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 521 — சீட்டிழுப்பு திகதி 2023-08-20 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,854,585.60
வெற்றி இலக்கினம் மிதுனம் — வெற்றி இலக்கங்கள் 21 25 30 35 — விசேட இலக்கினம் மிதுனம்

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1560 — 20/08/2023 — 72513 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 404,802,480.00
ஆங்கில எழுத்து Y — சுப்பர் இலக்கம் 25 — வெற்றி இலக்கங்கள் 07 23 29 30
ரூ. 10,000,000.00
ரூ. 10,000,000.00

# உயர்கல்விப் பிரச்சினைகள் தீர்க்கப்படல் வேண்டும்

## பேராதனை பொறியியல் பீட மாணவர் சங்கத் தலைவர்

கண்டி செய்தியாளர்

உயர்கல்வி தொடர்பான பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் எனவும் அவை குறித்த பிரச்சினைகள் தீர்க்கப்படாவிட்டால் இலவச கல்வியைப் பெற்றவர்கள் தாய்நாட்டுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற சிந்தனையில் மாற்றம் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவர் சங்கத் தலைவர் தினனுக தசநாயக்கா தெரிவித்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் திங்கட்கிழமை(21) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இன்று நாட்டில் உள்ள கைத்தொழில் நிர்மாணத்துறையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. சர்வதேச உதவிகள் மூலம் மேற்கொள்ளப்படும் நிர்மாணத்துறை சார்ந்தவைகள் கைவிடப்பட்ட நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பொறியியல் பீடங்களில் இருந்து உருவாகும் சிவில் பொறியியலாளர்கள், நிர்மாணத்துறைப் பொறியியலாளர்கள், இயந்திரவியல் பொறியியலாளர்கள், கணினி பொறியியலாளர்கள் போன்ற பலர் இன்று தொழில் இழக்கும் நிலை ஏற்பட்டு வருகிறது.

அதேநேரம், பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்திலிருந்து வெளியாகும் மேற்படி துறை சார்ந்தவர்கள் தொழில் தேடுவதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இதனால் அவர்கள் வெளிநாடு செல்வதை தவிர்க்க முடியாதுள்ளது. எனவே, உள்ளூரில் நிர்மாணத்துறை மற்றும் கைத்தொழில்துறை பின்னடைவுக்கு காரணம் எது என்பதைக் கண்டறிந்து அது தீர்க்கப்பட வேண்டும்.

சுதந்திர இலங்கையின் இலவசக் கல்வியைப் பெற்ற எம்மால் தாய்நாட்டுக்கு சேவை செய்யும் சந்தர்ப்பம் இல்லாமற்போகும் நிலை ஏற்படுவதை திட்டமிடுபவர் புரிந்துகொள்ள வேண்டும். இப்படியாக ஏகப்பட்ட பிரச்சினைகள் இருக்கும் போது வெளிநாடு செல்பவர்களை கட்டுப்படுத்துவது என்பது முடியாத காரியமாகி விடும். எனவே, புதிதாக வெளியாவோர் உட்பட தற்போது களத்தில் உள்ளவர்களது தொழில் பிரச்சினைக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மேலும், பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கத் தலைவர் பேராசிரியர் பரண ஜயவர்தனா 2017ஆம் ஆண்டு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் 11ஆயிரத்து 963 பேர் இருந்ததாகவும் ஆனால், 2023 ஆகும் போது அத்தொகை 6ஆயிரத்து 263 ஆகக் குறைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com



கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமாரின் சிபாரிசின் ஊடாக சமாதான நீதவானுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் ஊவா மாகாண சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன்போது ஸ்பிரிங்வெளி மேமலை தமிழ் வித்தியாலய அதிபர் எஸ்.திருச்செல்வம், ஹாலி-எல எல்வட்டன் தமிழ் வித்தியாலய அதிபர் யூ.து.ஆ.அஷாட், பசறை இல.04 தமிழ் மகா வித்தியாலய அதிபர் பி.நிரோஸ்குமார், மடுல்சீமை பட்டாவத்தை தமிழ் மகா வித்தியாலய ஆசிரியர் யூ.கண்மணிராஜா, பலாங்கொடை பம்பகொல்ல தமிழ் வித்தியாலய ஆசிரியர் மு.சந்திரகுமார், பசறை தபால் நிலைய உத்தியோகத்தர் நவராஜ், பதுளை விக்டரி கொமினிகேசன் உரிமையாளர் என்.நகுலேஸ்வரன், பண்டாரவளை நயபெத்த தோட்டத்தின் சேமநல அதிகாரி திருமதி எம்.டீ. சிரோமணி ஆகியோருக்கான நியமனக் கடிதங்களை வழங்கிவைத்தார்.

# ரத்வத்தை தோட்டத்தொழிலாளியின் கூடாரம் தகர்க்கப்பட்டமை மனித உரிமை மீறலாகும்

## ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் ஜீவன் கண்டனம்

மஸ்கெலியா செய்தியாளர்



மாத்தளை ரத்வத்த தோட்டத்தொழிலாளியின் தற்காலிக கூடாரத்தை தகர்த்தமை மலையகத்தில் இடம்பெற்ற முதல் சம்பவமுமல்ல, அதேவேளை, இறுதியானதாக இருக்கவும் மாட்டாது. இச்செயலானது மக்களின் வாழ்வதற்கான உரிமையைப் பறிக்கும் அப்பட்டமான மனித உரிமை மீறலாகும் என ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் பொதுச்செயலாளர் இரா.ஜீவன் இராஜேந்திரன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், இது கண்டிக்கத்தக்க செயலாகும் எனவும் அவர் தெரிவித்தார். நவீன உழைப்புச்சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் பாகுபாடுகளுக்கும் முகம் கொடுத்துவருகின்ற மலையக பெருந்தோட்ட உழைப்பாளர் மீது அண்மைக்காலங்களாக மிக மோசமான வன்முறைகளும் பயமுறுத்தல்களும் அடாவடித்தனங்களும் மேற்கொள்ளப்படுவதை வன்மையாகக் கண்டிப்பதோடு சம்பந்தப்பட்டவர்கள் எதிர்காலத்தில் இவ்வாறான மோசமான நிலை ஏற்படாதவாறு தடுத்து நிறுத்துவதற்கான நம்பிக்கை தரக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இருநூறு வருடங்களாக பொருளாதார ரீதியாக இந்த நாட்டை முற்றாக வீழ்ந்துவிடாமல் தாங்கிப்பிடித்துக்கொண்டிருக்கின்ற மலையகத் தமிழர்கள் இனரீதியான ஒடுக்குமுறைகளுக்குள்ளாக்கப்படுவதோடு மலையகத் தமிழர்களின் ஓர் அங்கமான பெருந்தோட்டத் தொழிலாளர்களை இனரீதியாகப் பாகுபடுத்தி தோட்ட நிர்வாக அதிகாரிகள் பல்வேறுபட்ட துன்புறுத்தல்களை மேற்கொண்டு வருகின்றார்கள்.

அதோடு வழங்கப்படும் ஊதியத்துக்கு மேலாக உழைப்பைச் சுரண்டுவதும் வீட்டுத்தோட்டங்கள், ஏனைய சுயதொழில்களை மேற்கொள்ளும்போது அதைத் தடுத்துநிறுத்துவதும் அவர்களுடைய ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்ற கொடுப்பனவுகளை சூட்சுமமாகக் கொள்ளையடிப்பது, தோட்டங்களை விட்டு வெளியேற்ற முனைவது, கடந்த 200 ஆண்டு காலம் வாழ்ந்து வந்த இல்லங்களை மீண்டும் பெற்றுக்கொள்ள அடாவடிச் செயல்களை மேற்கொள்வது போன்ற பல்வேறு வகையில் தொடர்ந்து நெருக்கடிகளைக் கொடுத்து வருகின்றனர்.

இதன் உச்சக்கட்டமாக குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு காரணமாக லயன் அறையில் வாழமுடியாத சூழ்நிலையில் மாத்தளை எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் இயங்கும் ரத்வத்த என்ற தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர் ஒரு தற்காலிக கூடாரம் அமைத்துக்கொண்ட நிலையில், அந்தக் கூடாரத்தை எவ்வித சட்ட வரம்புக்கும் உட்படாமல் வெறித்தனமாக உடைத்தெறியும் காட்டுமிராண்டித்தனத்தை சமூக ஊடகங்களில் காணக்கிடைத்தமை மிகப்பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந் நாட்டுக்கும் அந்த நிறுவனத்துக்கும் உழைத்துக் கொடுத்துக்கொண்டிருக்கின்ற ஒரு சமூகத்துக்கு செய்யும் நன்றிக்கடன் இதுதானா என்று கேட்கத்தோன்றுகிறது. இதுபோன்ற அடாவடித்தனங்களைத் தடுத்து நிறுத்த மக்கள் ஒரு சமூகமாகவும் பாட்டாளிவர்க்கமாகவும் கைகோர்க்கவேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசியல் தொழிற்சங்க பேதம்மறந்து அனைவரும் ஒன்றிணைந்து உடனடியாக நியாயத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். இது போன்ற பிரச்சினைகள் எதிர்காலத்தில் ஏற்படாமல் இருக்கவேண்டுமென்றால் ஒட்டுமொத்த மலையகத் தமிழர்களுக்கும் வாழ்விடம் அமைத்துக்கொள்வதற்கும் வாழ்வாதாரத்துக்குமான (பயிர்ச்செய்கை, சுயதொழில்) நிலவுரிமை உறுதிசெய்யப்படவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

# வறட்சி காரணமாக குடிநீர் விநியோகம் மட்டுப்படும்

## சிக்கனமாக பயன்படுத்தக் கோரிக்கை

மனுர சுதத் செல்லஹேவா

ஹட்டன் மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக ஹட்டன் பகுதிக்கான நீர் விநியோகம் மட்டுப்படுத்தப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் எனவே, குடிநீரை சிக்கனமாகப் பயன்படுத்துமாறும் ஹட்டன் நீர் வழங்கல் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப்பிரதேசத்தில் நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக ஹட்டன் நகருக்கு நீர் வழங்கும் சிங்கிமலை மற்றும் இன்வரி நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் பாரியளவில் குறைவடைந்துள்ளது.

இதேவேளை, மழையின்றி வறட்சியான காலநிலை தொடருமானால், ஹட்டன் நகரின் நீர் பாவனையாளர்களுக்கு வழங்கப்படும் நீரை மட்டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அப்பகுதியிலுள்ள அனைத்து பாவனையாளர்களும் இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தி வழங்கப்படும் நீரை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்துமாறும் கேட்டுக் கொள்ளப்படுவதாகவும் குறித்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.



மத்திய மாகாண கிராம அபிவிருத்தி வாரத்தை முன்னிட்டு அம்பகமுவ கிராம அபிவிருத்தி பிராந்திய சங்கத்தின் ஏற்பாட்டில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு அம்பகமுவ ஸ்ரீவிஜயபா விகாரையில் இடம்பெற்றது. நாவலப்பிட்டி மாவட்ட ஆரம்ப வைத்தியசாலையின் இரத்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும்பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் பலரும் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. படப்பிடிப்பு: மனுர சுதத் செல்லஹேவா

# வெவ்வேறு இடங்களில் இருந்தாலும் உணர்வுகளும் மொழியும் ஒன்றுதான்

## 'மலையகம் 200 வரலாறு நூல்' அறிமுக நிகழ்வில் செல்வம் அடைக்கலநாதன்

விஜயரத்தினம் சரவணன்

மலையக மக்களின் உரிமைகளுக்காக குரல்கொடுப்பதும் போராடுவதும் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் கடமை எனவும், வெவ்வேறு இடங்களில் இருந்தாலும் உணர்வுகளாலும் மொழியாலும் நாம் ஒன்றுபட்டுள்ளோம் எனவும் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற மலையகத் தமிழ் மக்களுடைய '200 வருட வரலாறு' எனும் வரலாற்று நூல் அறிமுக விழாவில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்திலே ஈழ விடுதலைப் போருக்காக பல மலையக இளைஞர்கள் பெரும்பங்காற்றியிருந்ததை இந்த இடத்தில் நினைவுபடுத்த விரும்புகின்றேன். வடக்கின் பல எல்லைக் கிராமங்கள் தற்போதும் தக்கவைக்கப்பட்டிருக்கின்றமைக்கு, அந்த எல்லைக்கிராமங்களில் குடியேற்றப்பட்டு வாழ்ந்துகொண்டிருக்கின்ற மலையக மக்களே காரணமாகும். மலையக மக்களாலேயே பல எல்லைக்கிராமங்கள் தற்போது சிங்களமயமாக்கலில் இருந்து பாதுகாக்கப்படுகின்றன. இடங்கள்தான் வேறு உணர்வுகளும் மொழியும் ஒன்று என்பதை பல சந்தர்ப்பங்களிலே மலையக மக்கள் உணர்த்தியிருக்கின்றார்கள்.




மலையக மக்கள் ஒரு தேசிய இனம். அந்தத் தேசிய இனத்துக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளைத் தட்டிக் கேட்கவேண்டிய பொறுப்பும் கடமையும் எமக்கிருக்கின்றது. மலையக மக்களின் அனைத்து விடயங்களும் எம்மோடு ஒன்றிணைந்து ஒத்துப்போகின்ற சூழல், நாம் அனைவரும் ஓர் இனம் எனக் காட்டிநிற்கின்ற நிலையிலே அந்த மக்களுக்குரிய விடுதலையைப் பெற்றுக்கொடுக்கின்ற கடமையும் பொறுப்பும் எமக்கிருக்கின்றது.

மலையக மக்கள் இந்த நாட்டின் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் இந்த நாட்டில் வாழ்வதற்கான அனைத்து உரித்தும் அந்த மக்களுக்கு இருக்கிறது. அவர்களுக்கு இங்கு நிலமில்லை. ஆனால், இந்த மண்ணைப் பாதுகாக்கப் போராடுகின்றனர். முறையான வேதனம் இல்லை. முறையான வேதனத்தைப் பெற்றுக்கொடுக்க அரசியல் தலைவர்கள் முயன்றாலும் அரசாங்கம் இடங்கொடுப்பதில்லை. ஆகவே, தேயிலைக் கொழுந்துகளை எடுத்து இந்த நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தவேண்டிய தேவை எமது மக்களுக்கு இல்லை. மலையக மக்களின் பிரச்சினைகளுக்காக குரல் கொடுப்பதும் அவர்களின் உரிமைகளுக்காக அவர்களுடன் தோளோடு தோள் நின்று போராடுவதும் அவர்களுக்கான பங்களிப்புகளைச் செய்வதும் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுடைய கடமை - என்றார்.

# கட்டுப்படுத்த முடியாது கை மீறிச் செல்லும் சட்டவிரோத மணல் அகழ்வு

மு.தமிழ்ச்செல்வன்



கிளிநொச்சி மாவட்டத்தின் பல பிரதேசங்களில் சட்டவிரோத மணல் அகழ்வு நடைபெறுகின்றது. இதனைக் கட்டுப்படுத்தமுடியாத நிலையில் கைமீறிச் செல்வதாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

நாளுக்கு நாள் இவ்வாறான சட்டவிரோத மணல் அகழ்வுகள் அதிகரித்துச் செல்கின்றன. குறிப்பாக, கடலுக்கு அண்மையாக உள்ள கிராமங்களில் அதிகரித்துள்ள சட்டவிரோத மணல் அகழ்வு காரணமாக முழுக் கிராமமும் பாதிக்கப்படுகின்ற ஆபத்து ஏற்பட்டுள்ளது. இவற்றைக் கட்டுப்படுத்தத் தவறின் தாம் தமது ஊர்களை இழந்து விடுவோம் எனவும் கவலை தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கல்லாறு, உமையாள்புரம், விளாவோடை, தட்டுவன்கொட்டி, இரணைமடு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களும் ஊரியான், முரசுமோட்டை, பெரியகுளம், கிளாலி உள்ளிட்ட பல பிரதேசங்களிலும் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுகின்றவர்களின் விபரங்களை சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு வழங்கினால் அன்றிரவு தங்கள் வீடுகள் தாக்கப்படும் அல்லது தங்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்படும் என அச்சுறுத்தல்களும் இடம்பெறுவதனால் பொது மக்களாகிய நாம் அமைதி காக்க வேண்டிய துர்ப்பாக்கியநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்றும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பல தடவைகள் குறித்த விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டபோதும் சரி, மாவட்டத்தில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்துக்கு பல தடவைகள் கொண்டு சென்றபோதும் சரி இதுவரை எவராலும் எதுவும் நடக்கவில்லை என்று தெரிவிக்கும் பொது மக்கள், சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுகின்றவர்களில் பெரும்பாலானவர்கள் அரசியல்தரப்புகளின் செல்வாக்குள்ளவர்கள் - என்றும் தெரிவித்தனர்.

# சாவகச்சேரியில் இடம்பெற்ற ஐ.தே.கவின் பொதுக்கூட்டம்



சாவகச்சேரி செய்தியாளர்

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுக்கூட்டம் சாவகச்சேரி தலைமைக்காரியாலயத்தில் நகரசபை முன்னாள் உறுப்பினர் கு.சர்வானந்தன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை(20) பிற்பகல் இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார கலந்துகொண்டிருந்தார்.

இதன்போது முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், சர்வமத குருமார்கள், கட்சியின் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்த இந்நிகழ்வில், கட்சியில் புதிதாக இணைந்த உறுப்பினர்களுக்கு பொதுச் செயலாளரால் உறுப்புரிமை வழங்கி வைக்கப்பட்டது.

அத்துடன், ஏற்கனவே நியமனக் கடிதம் கிடைத்தும் நியமனம் இடைநிறுத்தப்பட்டுள்ள சுகாதார தொண்டர்களுடனான சந்திப்பு, தகுதி இருந்தும் சமுர்த்திக் கொடுப்பனவு நிராகரிக்கப்பட்டவர்களுடனான சந்திப்புகளும் இதன்போது இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# ஹெரோயினுடன் மூவர் கைது

சாவகச்சேரி செய்தியாளர்

ஹெரோயின் போதைப்பொருளுடன் மூவர் சாவகச்சேரியில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கைதுச் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை(20) சாவகச்சேரி நகர் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது இடம்பெற்றுள்ளது.

கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் மூவரிடமிருந்தும் தலா 40மில்லிகிராம் ஹெரோயினும் மற்றைய நபரிடம் 30மில்லிகிராம் ஹெரோயினும் மீட்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைதான சந்தேக நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மருந்துத் தட்டுப்பாட்டால் மரண வீதம் அதிகரிப்பு

## முன்னாள் உப தவிசாளர் மயூரன் சுட்டிக்காட்டு

சாவகச்சேரி செய்தியாளர்



இலங்கையில் கடந்த காலங்களை விடவும் தற்போது நெருக்கடியான நிலைமை காணப்படுகிறது. குறிப்பாக, நாட்டில் உள்ள சகல வைத்தியசாலைகளிலும் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனை நிவர்த்தி செய்ய சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை. இதனால் அண்மைக்காலமாக மரணங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றதாக சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் செ.மயூரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

சாவகச்சேரியில் வெள்ளிக்கிழமை(18) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், வைத்தியசாலைகளில் மருந்துத் தட்டுப்பாடு நிலவுவதாக வைத்தியத்துறை சார்ந்த அதிகாரிகள் சுட்டிக்காட்டி வருகின்றனர். குறிப்பாக, சத்திரசிகிச்சையின் போது நோயாளிகளை மயக்க பயன்படுத்தும் மயக்க மருந்தின் அளவை பாதியளவு குறைப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் இதனால் சத்திரசிகிச்சையின் இடைநடுவே நோயாளி மயக்கம் தெளிந்து சத்திரசிகிச்சையை முறையாகச் செய்து முடிக்க முடியாத நிலை ஏற்படும் எனவும் வைத்தியர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

வைத்தியசாலைகளில் கடும் மருந்துத் தட்டுப்பாடு நிலவிவருகின்ற போதிலும் மருந்துத் தட்டுப்பாடு இல்லாதது போன்று காட்டிக்கொள்கிறார்கள். பல மருந்துகள் மருந்தகங்களில் இல்லை. சுகாதார அமைச்சரால் மருந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய முடியாவிட்டால் பதவி விலகி தகுதியான ஒருவருக்கு வழிவிட வேண்டும். அதன் மூலமாக மக்களின் மரண விகிதத்தைக் குறைக்க முடியும் - என்றார்.

உலக செய்திகள்




# நிலவை தொட்டுவிடும் தூரத்தில் சந்திரயான் - 3

## நாளை தரையிறங்குகின்றது விக்ரம்

சந்திரயான்-3 நாளை (23) மாலை 6.04 மணிக்கு நிலவில் தரையிறங்கவுள்ள நிலையில், விண்கலம் நிலவைத் தொட்டுவிடும் தூரத்தில் வலம் வந்துகொண்டிருப்பதாக இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், சந்திரயான்-3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் எடுத்த நிலவின் புதிய புகைப்படங்கள் சிலவற்றை இஸ்ரோ தனது எக்ஸ் தளத்தில் நேற்று வெளியிட்டுள்ளது.

இந்த படங்கள் நிலவில் தரையிறங்கும் சரியான பகுதியை விஞ்ஞானிகள் முடிவு செய்வதற்கு பெரும் உதவியாக இருக்கும் என தெரிவிக்கப்படுகிறது. அந்தவகையில், விக்ரம் லேண்டர் அனுப்பியுள்ள 04 படங்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

இந்தப் புகைப்படங்கள் ஓகஸ்ட் 19ஆம் திகதி எடுக்கப்பட்டவை. தற்போது சந்திரயான் - 3 நிலவிலிருந்து 25 km x 134 km குறைக்கப்பட்ட தூரத்தில் உலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, நிலவுக்கு ரஷ்யா அனுப்பிய லூனா-25 விண்கலம், தரையிறங்குவதற்கு முந்தைய சுற்றுவட்டப் பாதையில் நுழையும் போது கட்டுப்பாட்டை இழந்து, கீழே வீழ்ந்து நொறுங்கியது. இதனால் தற்போது ஒட்டுமொத்த விண்வெளி ஆராய்ச்சி உலகின் கவனமும் இஸ்ரோவின் சந்திரயான் - 3இன் மீது திரும்பியுள்ளது.

தரையிறக்கத்தின்போதான அசம்பாவிதங்களைத் தவிர்க்கவே லேண்டர் எந்தப் பகுதியை தவிர்க்கலாம், எது பொருத்தமான இடமாக இருக்கும் போன்றவற்றை ஆராய்ந்து படம் எடுத்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

லேண்டர் சாதனத்தின் இரண்டாவது மற்றும் கடைசி தூரக் குறைப்பு நடவடிக்கை நேற்றுமுன்தினம் வெற்றிகரமாக இடம்பெற்றது. இந்நிலையில் நிலவை தொட்டு விடும் தூரத்தில் விக்ரம் லேண்டர் உள்ளது.

### 'Welcome, buddy!'
### விக்ரமை வரவேற்ற ஆர்பிட்டர்


இந்நிலையில், ஏற்கனவே நிலவை சுற்றிக் கொண்டிருக்கும் சந்திரயான்-2 ஆர்பிட்டருக்கும் சந்திரயான்-3 லேண்டருக்கும் இடையே வெற்றிகரமாக தொலைத்தொடர்பு இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக இஸ்ரோ அறிவித்துள்ளது.

தென் துருவத்தில் தரையிறங்கி ஆய்வு செய்ய சந்திரயான் - 3 விண்கலத்துடன் அனுப்பப்பட்ட விக்ரம் லேண்டர், நிலவின் மேற்பரப்பை நெருங்கி பயணித்து வருகிறது.

இந்நிலையில், 04 ஆண்டுகளுக்கு முன்பு நிலவை ஆய்வு செய்ய ஏவப்பட்ட சந்திரயான் - 2 ஆர்பிட்டாருடன், லேண்டருக்கு இரு வழி தொலைத்தொடர்பு இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம், பெங்களூருவிலுள்ள தரைக்கட்டுப்பாட்டு நிலையத்திலிருந்து லேண்டரை தொடர்பு கொள்ள கூடுதல் வழி உருவாகியுள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது. அந்தவகையில், 'Welcome, buddy!' என சந்திரயான்-3இன் லேண்டருக்கு தகவல் அனுப்பி சந்திரயான்-2இன் ஆர்பிட்டர் வரவேற்றுள்ளது. கடந்த 2019இல் சந்திரயான்-2 லேண்டர் நிலவில் மோதியதால் அந்த முயற்சி தோல்வியை தழுவியமை குறிப்பிடத்தக்கது.

### இஸ்ரோவின் இரண்டாவது முயற்சி

இந்திய விண்வெளி ஆய்வு நிலையமான இஸ்ரோ நிலவை ஆய்வு செய்வதற்காக, சந்திரயான் - 3 விண்கலத்தை ஜூலை 14ஆம் திகதி ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து வெற்றிகரமாக செலுத்தியது.



Lunar far side area as imaged from the Lander Hazard Detection and Avoidance Camera (LHDAC) onboard Chandrayaan-3 on August 19, 2023

Lunar far side area as imaged from the Lander Hazard Detection and Avoidance Camera (LHDAC) onboard Chandrayaan-3 on August 19, 2023

இந்த விண்கலம் மூன்று பிரிவுகளை கொண்டதாகும். புரபல்ஷன் மாட்யூல் எனப்படும் உந்து கலன், லேண்டர் எனப்படும் நிலவில் தரையிறங்கும் சாதனம், ரோவர் எனப்படும் நிலவில் ஆய்வு செய்யும் வாகனம் அடங்கியதே சந்திரயான் - 3 விண்கலமாகும்.

இதில் உந்து கலனுக்குள் லேண்டர் சாதனமும் லேண்டர் சாதனத்துக்குள் ரோவர் வாகனமும் இடம்பெற்றுள்ளன.

பூமியின் சுற்று வட்டப் பாதையிலிருந்து, கடந்த 5ஆம் திகதி நிலவின் சுற்று வட்டப் பாதைக்கு சந்திரயான் - 3 விண்கலம் செலுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து, சந்திரயான் - 3 விண்கலத்திலிருந்து விக்ரம் என்று பெயரிடப்பட்டுள்ள லேண்டர் சாதனம் தனியாக பிரிந்தது. பிரக்யான் என பெயரிடப்பட்டுள்ள ரோவர் வாகனத்தை சுமந்துள்ள விக்ரம் லேண்டர் சாதனம் தற்போது நிலவை சுற்றி வருகிறது.

நிலவிலிருந்து குறைந்தபட்சம் 25 கி.மீ., மற்றும் அதிகபட்சம் 134 கிலோமீற்றர் சுற்று வட்டப் பாதைக்குள் லேண்டர் சாதனம் நேற்று வெற்றிகரமாக செலுத்தப்பட்டது. நிலவிலிருந்து குறைந்தபட்சம் 30 கிலோமீற்றர் மற்றும் அதிகபட்சம் 100 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கும்போது விக்ரம் லேண்டர் சாதனம் நிலைநிறுத்தப்படவுள்ளது. அதற்கேற்ப அதன் வேகம் குறைக்கப்பட்டுள்ளது. நாளை இந்த இலக்கை எட்டியவுடன், லேண்டர் சாதனத்தின் வேகம் மேலும் கட்டுப்படுத்தப்பட்டு, நிலவின் மேற்பகுதியில் மெதுவாக தரையிறக்க, இஸ்ரோ விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர்.

இந்நிலையில் விக்ரம் லேண்டர் நாளை (23) மாலை மாலை 6:04 மணிக்கு தரையிறக்கப்படவுள்ளதாக இஸ்ரோ அறிவித்துள்ளது.

# சவூதிக்கு சட்டவிரோதமாக புலம்பெயர்ந்தோர் மீது துப்பாக்கிச்சூடு

### 4 மாதங்களில் 430 பேர் உயிரிழப்பு

யேமன் வழியாக சவூதிக்கு சட்டவிரோதமாக புலம்பெயர்வோர் மீது அந்நாட்டு இராணுவம் வெடிகுண்டு வீசி தாக்கி வருவதாக மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு குற்றம்சாட்டியுள்ளது.

எத்தியோப்பியா போன்ற ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள், வேலை தேடி சவூதி அரேபியாவுக்குள் சட்டவிரோதமாக நுழைந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

யேமன் எல்லை அருகே அவர்களை சவூதி இராணுவத்தினர் கண்மூடித்தனமாகச் சுட்டுக்கொல்வதாகவும் கடந்த ஆண்டின் முதல் 04 மாதங்களில் மட்டும் 430 பேர் கொல்லப்பட்டதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

பல ஆயிரம் கோடி ரூபா கொடுத்து முன்னணி கால்பந்து வீரர்களை விலைக்கு வாங்கி சர்வதேச அரங்கில் செல்வாக்கை உயர்த்த விரும்பும் சவூதி, இதுகுறித்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்க மறுத்துவிட்டதாக மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

# வறட்சியின் கோரப்பிடிக்குள் பனாமா

பனாமா கால்வாய் பகுதியில் வரலாறு காணாத வறட்சி நிலவுவதால் 200இற்கும் மேற்பட்ட கப்பல்கள் பனாமா கால்வாயில் சிக்கியுள்ளன.

பனாமா கால்வாய் பசுபிக் பெருங்கடலையும் அட்லாண்டிக் பெருங்கடலையும் அமெரிக்கக் கண்டங்களிடையே இணைக்கும் செயற்கைக் கால்வாய் ஆகும். இது 48 மைல் நீளமுள்ள நீர்வழித்தடம் ஆகும்.

மேலும் இக்கால்வாய் சர்வதேச கடல்வழி வர்த்தகத்துக்கான முக்கிய வழியாக உள்ளது. இங்கு கடும் வறட்சி நிலவுவதால் 200இற்கும் மேற்பட்ட கப்பல்கள் சிக்கி தவிக்கின்றன. அவற்றை மீட்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

# போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்துவது தொடர்பில் பாராளுமன்ற குழுவில் விசேட அவதானம்





நாட்டில் வேகமாகப் பரவிவரும் போதைப்பொருள் அச்சுறுத்தலை உடனடியாகக் கட்டுப்படுத்துதல் மற்றும் ஒழித்தல், அதற்காக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்து ஆராய்ந்து அது பற்றிய அவதானிப்புகளையும் விதப்புரைகளையும் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிப்பது தொடர்பில் பாராளுமன்ற விசேட குழுவில் ஆராயப்பட்டுள்ளது.

குறித்த குழு அமைச்சர் டிரான் அலஸ் தலைமையில் அண்மையில் பாராளுமன்றத்தில் கூடிய சந்தர்ப்பத்திலேயே இது பற்றிக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கை பொலிஸ், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை மற்றும் புகையிலை மற்றும் மதுபானங்கள் மீதான தேசிய அதிகாரசபை ஆகியன இந்தக் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்ததுடன், இந்நாட்டில் போதைப்பொருள் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவதற்கு இந்நிறுவனங்கள் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளன.

நாட்டில் போதைப்பொருள் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தலைமையில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக குழுவின் தலைவர் அமைச்சர் டிரான் அலஸ் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், பாரியளவில் போதைப்பொருட்கள் நாட்டுக்குள் கொண்டுவரப்படுவதைத் தடுப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்துகொண்ட அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். இதற்காக அண்மைய நாடுகளின் புலனாய்வுப் பிரிவுகளின் ஒத்துழைப்பைப் பெற்றிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

புகையிலை மற்றும் மதுபான பாவனையை குறைப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய சில ஆலோசனைகளை புகையிலை மற்றும் மதுபானங்கள் மீதான தேசிய அதிகாரசபையை பிரதிநிதித்துவப்படுத்தி வருகை தந்த அதிகாரிகள் குழுவில் முன்வைத்தனர். மேலும், போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை செயற்பட்டு வருவதாக அதன் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இக்குழுக் கூட்டத்துக்கு வருகை தந்திருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் போதைப்பொருளைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்த ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை முன்வைத்ததுடன், உறுப்பினர்களின் கருத்துகளையும் கருத்தில்கொண்டு, வருகை தந்திருந்த நிறுவனங்களின் ஆலோசனைகளையும் உள்ளடக்கியதாக அறிக்கையொன்றைக் குழுவில் சமர்ப்பிக்குமாறு குழுவின் தலைவர் அமைச்சர் டிரான் அலஸ் வலியுறுத்தியுள்ளார்.

இந்தக் குழுக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி, பாராளுமன்ற உறுப்பினர்களான புத்திக பத்திரண, ஜயந்த சமரவீர, உபுல் கலப்பதி, உபுல் மகேந்திர ராஜபக்ஷ, ராஜிகா விக்ரமசிங்க மற்றும் மஞ்சுளா திசாநாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பட்டதாரிகளுக்கான தொழில் வயதெல்லையை 38ஆக உயர்த்துக

## இராஜாங்க அமைச்சர் ரோஹண வேண்டுகோள்

கண்டி நிருபர்

இளைஞர் மனநிலை பாதிப்படையாதிருக்க பட்டதாரிகளுக்கு தொழில் வழங்குவது தொடர்பான அதி கூடிய வயதெல்லையை 35இல் இருந்து 38 ஆக உயர்த்தப்பட வேண்டும் என இளைஞர் விவகார விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் ரோஹண திசாநாயக்க வேண்டுகோள் விடுத்தார்.

இரத்தோட்டையில் நேற்று (21) இடம்பெற்ற பிரதேச அபிவிருத்திக் கூட்டத்தில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் அபிவிருத்தியில் புத்திஜீவிகளின் பங்களிப்பு அவசியமாகும். ஆனால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொவிட் தொற்று, பொருளாதார மந்த நிலை, அரகலய என்ற கலகக் காரர்களது செயற்பாடு என்பன பட்டதாரிகளின் எழுச்சியை பொருளாதார செயற்பாட்டில் பங்கெடுக்கச் செய்யும் நிலையை பின்னடையச் செய்தது. எனவே அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கும் வகையில் பட்டதாரிகளுக்கான அரச நியமன அதி உயர் வயதெல்லையை 35இல் இருந்து 38 ஆக உயர்த்த வேண்டும்.

அப்படியல்லாத பட்சத்தில் அவர்களது மன நிலை பாதிக்கப்படலாம் என்றார்.

# முதலீட்டாளர்களின் பங்களிப்புடன் கடலுணவுகளை ஏற்றுமதிசெய்வது தொடர்பில் கலந்துரையாடல்



கடலுணவுகளை தனியார் முதலீட்டாளர்களின் பங்களிப்புடன் ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் தொடர்பில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனுக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று நேற்று (21) இடம்பெற்றது.

கடற்றொழில் அமைச்சில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், புலம்பெயர் நாடுகளை சேர்ந்த தனியார் முதலீட்டாளர்களின் பிரதிநிதிகள் குழுவினரும் கலந்துகொண்டிருந்தனர்.

சர்வதேச சந்தைகளுக்கு கடலுணவுகளை ஏற்றுமதி செய்வதன் மூலம் நாட்டுக்கு தேவையான அந்நியச் செலாவணிகளை பெற்றுக்கொள்வதுடன், கடற்றொழில் சார்ந்த மக்களின் வாழ்வாதாரத்தினையும் வலுப்படுத்த முடியும் என்பதை அதிகாரிகள் மத்தியில் வலியுறுத்தி வருகின்ற கடற்றொழில் அமைச்சர், புலம்பெயர் முதலீட்டாளர்களின் பங்களிப்புக்கான கோரிக்கையை முன்வைத்து வருவதுடன் தனியார் முதலீட்டாளர்களுக்கான ஒத்துழைப்பினையும் ஊக்குவிப்பினையும் தொடர்ச்சியாக வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 'இனிய நந்தவனம்' வெளியீட்டு விழா





'இனிய நந்தவனம்' இலங்கை சிறப்பிதழ் வெளியீட்டு விழா கண்டி ஜின்னா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது நூலின் சிறப்பு பிரதியை அறங்காவலர் முருகாமலை முருகன் கோயில் பெ.பழனியப்பன் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த பாராளுமன்ற உறுப்பினர் பெ.இராதாகிருஷ்ணனிடமிருந்து பெற்று கொண்டார். நந்தவனம் ஆசிரியர் சந்திரசேகரன், நிகழ்வுக்கு முன்னிலை வகித்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# வாராந்த சந்தைகளை மூடுமாறு கோரி கல்குடா வர்த்தகர்கள் ஆர்ப்பாட்டம்



கல்குடா முர்ஷித்

தமது பிரதேசங்களிலுள்ள வாராந்த சந்தைகளை மூடுமாறு கோரி கல்குடாத் தொகுதி வர்த்தகர்கள் ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்டப்பேரணி நேற்று(21) இடம்பெற்றது.

வாழைச்சேனை வர்த்தக சங்கத் தலைவர் எஸ்.ஏ. றபீக் தலைமையில் வாழைச்சேனை பொதுச் சந்தைக்கு முன்பாக ஆரம்பமான ஆர்ப்பாட்டப் பேரணியானது வாழைச்சேனை பிரதேச சபை வரை சென்றது. இதன்போது பிரதேச சபைச் செயலாளர் எஸ்.நவநீதன் மற்றும் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக பிரதேச செயலாளர் எஸ்.எச்.எம்.முஸம்மில் ஆகியோருக்கு தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களைக் கையளித்ததுடன் மீண்டும் ஆர்ப்பாட்டப்பேரணி பாசிக்குடா - கொழும்பு பிரதான வீதி வழியாக ஓட்டமாவடி பிரதேச சபையைச் சென்றடைந்தது.அங்கு சென்ற போராட்டக்காரர்கள் பிரதேச சபைச் செயலாளர் எஸ்.எம்.சிஹாப்தீனைச் சந்தித்து மகஜரை கையளித்துவிட்டு அங்கிருந்து கலைந்து சென்றனர்.

வாழைச்சேனை மற்றும் ஓட்டமாவடி பிரதேச சபை எல்லைகளுக்குள் வாராந்த சந்தைகள் அதிகரித்துள்ளன.இதனால் தங்களது வர்த்தக நிலையங்களின் வியாபார நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளன என்றும் தமது வருமானம் குறைந்துள்ளதென்றும் தாங்களே பிரதேச சபைக்கு வருமானத்தை ஈட்டித்தருவதாகவும் பிரதேசத்தின் அனைத்து விடயங்களுக்கும் பொருளாதார ரீதியாக உதவிகளைத் தாம் செய்து வருவதாகவும் தங்களது வர்த்தக நிலையங்களுக்கு சுகாதார தரப்பினர், விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் வருகை தந்து சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர் என்றும் ஆனால், வாராந்த சந்தைகளில் தரமற்ற பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன என்றும் இதனால் பொது மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்றும் அதில் குறிப்பிட்டிருந்தனர்.

பொது மக்களின் நலனைக் கருத்திற் கொண்டும் முறையாக அனுமதிப்பத்திரம் பெற்று வியாபாரம் செய்யும் வியாபாரிகள் பாதிப்படையாத வகையிலும் உடனடியாக பிரதேச சபைகளால் அனுமதி வழங்கப்பட்டுள்ள வாராந்த சந்தைகளை மூடவேண்டும் என்றும் அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வார்ப்பாட்டப் பேரணியில் பௌத்த, இஸ்லாமிய மதத் தலைவர்கள், வாழைச்சேனை, ஓட்டமாவடி, மாவடிச்சேனை, செம்மண்ஓடை, பிறைந்துரைச்சேனை போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் வர்த்தகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

மகஜர்களை பெற்றுக்கொண்ட வாழைச்சேனை மற்றும் ஓட்டமாவடி பிரதேச சபைச் செயலாளர்களும் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக செயலாளரும் தங்களது மேல் அதிகாரிகளுக்கு இந்த மகஜர்களை உடன் அனுப்பி வைப்பதுடன் இதற்கான தீர்வையும் பெற்றுத்தருவதாக ஆர்ப்பாட்டக்காரர்களிடம் தெரிவித்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



திருகோணமலை சப்தம்ஸ் இசைக்குழு ஏற்பாடு செய்த மூத்த கலைஞர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு திருமலை மாவட்ட கலாசார மண்டபத்தில் அண்மையில் இடம் பெற்றது. இதன்போது திருகோணமலையில் கடந்த கால்நூற்றாண்டு காலமாக இசைத்துறையில் பங்காற்றி வரும் லியோ ஜெஸ்டின் 'கலைத் தாய்' என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். இவருக்கான விருதை திருகோணமலை மாவட்ட கலால் திணைக்கள உதவி ஆணையாளர் சண்முகம் தங்கராஜா வழங்கினார்.

## ஒலுவில் துறைமுகத்தினூடாக மீன்பிடி நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியம்

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



கிழக்கு கடற் பரப்பில் ஏராளமான கடலுணவு சார்ந்த வளங்கள் காணப்படுகின்ற போதிலும், இதுவரையில் அவை சரியான முறையில் பயன்படுத்தப்படுவதில்லை என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஒலுவில் துறைமுகத்தில் மீன்பிடிச் செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் குறித்த குறைபாட்டை கணிசமானளவு நிவர்த்தி செய்துகொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

கிழக்குக்கான விஜயத்தை கடற்றொழில் அமைச்சர் விரைவில் மேற்கொள்வதற்குத் தீர்மானித்துள்ள நிலையில், ஒலுவில் துறைமுகத்தின் செயற்பாடுகளை ஆரம்பிப்பது தொடர்பான ஏற்பாடுகளின் முன்னேற்றம் குறித்து நேற்று(21) சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், ஒலுவில் துறைமுகம் அமைக்கப்பட்டமையினால் அயல் கிராமங்களில் கடலரிப்பு அதிகரித்துள்ளதாகவும் துறைமுகத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுமாயின், கடலரிப்பு வேகம் மேலும் அதிகரிக்கலாம் எனவும் சில தரப்புகளினால் அச்சம் வெளியிடப்பட்டு வருவதை சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த விடயம் தொடர்பாக ஆய்வு ரீதியான அறிக்கைகளைப் பெற்று அதனடிப்படையில் வேலைகள் ஒழுங்குபடுத்தப்படுவதுடன், பிரதேச மக்களுக்குத் தெளிவுபடுத்தப்பட வேண்டியதும் அவசியம் என வலியுறுத்தினார்.

## சேருவிலவில் சுகாதார அமைச்சருக்கு எதிராக கையெழுத்து வேட்டை



மூதூர் நிருபர்

சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெலவுக்கு பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்து பதவி விலக்குவதற்கான கையெழுத்து வேட்டை திருகோணமலை -சேருவில பிரதேசத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

நாடு தழுவிய ரீதியில் சுகாதார அமைச்சருக்கு எதிராக 10 இலட்சம் கையெழுத்துகளைத் திரட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், சேருவில பகுதியிலும் நேற்று கையெழுத்து வேட்டை இடம்பெற்றது.

தமிழ்,முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் கையெழுத்து வேட்டையில் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

நாட்டின் சுகாதாரத் துறையானது தற்போது மோசமான நிலையில் காணப்படுகின்றது. இந்நிலைமை மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதற்காகவே இக்கையெழுத்து வேட்டை முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் போரத்தின் ஆறாவது மாநாடு



பெரியநீலாவணை செய்தியாளர்

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் போரத்தின் ஆறாவது மாநாடும் ஊடகவியலாளர் கௌரவிப்பும் புதிய நிருவாகிகள் தெரிவும் போரத்தின் தலைவர் எம்.ஏ.பகுர்டீன் தலைமையில் அக்கரைப்பற்று எய்ம்ஸ் சர்வதேச பாடசாலை கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் (20) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை இராணுவத்தின் 24 ஆவது படைப் பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் விபுல சந்ரசிறி, தென்கிழக்கு பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அப்துல்லா, தினகரன் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் கே.குணராசா ஆகியோர் அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது ஊடகத்துறையில் நீண்டகாலமாகப் பணியாற்றிவரும் பிரதேச ஊடகவியலாளர்கள் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வின் இறுதியில் நடப்பாண்டுக்கான புதிய நிருவாக சபைத் தெரிவு தற்காலிக தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.ஐ.எம்.அஸ்ஹர் முன்னிலையில் இடம்பெற்றது.

அவர்களின் விபரம் வருமாறு:

தலைவர் - எம்.எஸ்.எம்.ஹனீபா, செயலாளர் - ஏ.எல்.எம்.ஷினாஸ், பொருளாளர்- எம்.எவ்.எம்.நவாஸ், தவிசாளர்- எம்.ஏ.பகுர்டீன், பிரதித் தலைவர்: ஏ.எல்.ஏ.நிப்றாஸ், அமைப்பாளர் - யூ.எல்.எம்.றியாஸ், கணக்காய்வாளர்- எம்.எஸ்.எம்.ஏ.மலீக், உப தலைவர் - எம்.சஹாப்தீன், உப செயலாளர் - வீ.சுகிர்தகுமார் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

## ஆக்கத்திறன் போட்டி விண்ணப்பம் கோரல்

இஸ்மாயில்புரம் செய்தியாளர்

அரச உத்தியோகத்தர்களுக்கிடையில் ஆக்கத்திறன் போட்டிகளை நடத்துவதற்காக கலாசார அலுவல்கள் அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அரச நிறுவனங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் ஆக்கத் திறன்களை மேம்படுத்தல், மதிப்பளித்தல், ஆக்கங்களை வெளியிடுவதற்கான வாய்ப்புகளை வழங்குதல் மற்றும் அரச நிறுவனங்களின் கலாசார நடவடிக்கைகளை ஊக்குவித்தல் போன்ற நோக்கில் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு இவ்வருடமும் இப் போட்டிகளை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

இதன்படி குறுநாடகம், சித்திரம், குறுந் திரைப்படம், புகைப்படம் ஆகிய போட்டிப் பிரிவுகளுக்கான விண்ணப்பங்களை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## பயிற்சிப் பட்டறை

மட்டக்களப்பு நிருபர்

வெய்ஸ் ஒவ் றைட்ஸ் நிறுவனம் நடத்திய சமாதானம், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமை செயற்பாடுகள் தொடர்பான பயிற்சிப் பட்டறை மட்டக்களப்பில் நேற்றும் நேற்று முன்தினமும் இடம்பெற்றது.

மட்டக்களப்பு ஆறுமுகத்தான் குடியிருப்பில் அமைந்துள்ள பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவட்டத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட தமிழ் மற்றும் முஸ்லிம் இளைஞர் - யுவதிகள் 25 பேர் கலந்து கொண்டனர்.

இதன்போது அப்றியல் நிறுவனத்தினதும் வெய்ஸ் ஒவ் றைட்ஸ் அமைப்பினதும் வளவாளர்கள் கலந்துகொண்டு விளக்கமளித்தனர்.



மாளிகைக்காடு அல்- ஹுசைன் வித்தியாலய 30ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும் பாடசாலையின் முதல் ஆசிரியரும் இரண்டாவது அதிபருமான ஏ.எல்.எம். ஏ நழீரின் ஓய்வை முன்னிட்டும் பாடசாலை பழைய மாணவர்கள் செயற்குழுவின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள "முத்தாய்ப்பான முத்து" விழாவின் முதல் கட்ட ரீ சேர்ட் அறிமுக விழா நேற்றுமுன்தினம் (20) பாடசாலையில் நடைபெற்றது.

படங்கள்: நூருல் ஹுதா உமர்



மண்முனை மேற்கு கல்வி வலயத்துக்குட் பட்ட அம்பிளாந்துறை கலைமகள் மகா வித்தியாலயத்தின் 140 ஆவது ஆண்டை முன்னிட்டு பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் நேற்றுமுன்தினம் (21)இரத்ததான நிகழ்வொன்றை பாடசாலை மண்டபத்தில் நடத்தியது.

படங்கள்: மட்டக்களப்பு நிருபர்

## கல்வி ஊக்குவிப்பு கொடுப்பனவு



பாறுக் ஷிஹான்

கல்முனை தாராள உள்ளங்கள் அறக்கட்டளை அமைப்பினால் தேவையுடைய 15 பல்கலைக்கழக மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு கொடுப்பனவு நேற்று முன்தினம்(20) வழங்கப்பட்டது.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.சந்திரகுமார், தாராள உள்ளங்கள் அறக்கட்டளையின் மகளிர் பிரிவுத் தலைவி ஷரேன் பியுமி(பிரான்ஸ்), அமைப்பின் தலைவர் ஜெ.ஜெயப்பிரகாஸ், செயலாளர் எஸ். ஸ்ரீகரன், பொருளாளர் எஸ்.யுவசந்தராஜா மற்றும் அமைப்பின் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## திருகோணமலையில் சஞ்சிகை வெளியீடு



கிண்ணியா நிருபர்

இனிய நந்தவனம் சஞ்சிகையின் இலங்கை சிறப்பிதழ் நேற்றுமுன்தினம் மாலை திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வாசல் வாசகர் வட்டத்தின் தலைவர் ஊடகவியலாளர் அரசரெத்தினம் அச்சுதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், வாசல் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் ச.திருச்செந்தூரன், கவிஞர் க.யோகானந்தம், கவிஞர் தில்லைநாதன் பவித்ரன் உள்ளிட்டோர் உரையாற்றினர்.

இதன்போது அனாமிகா பண்பாட்டு மையத்தின் நிறுவுநர் பேராசிரியர் பால. சுகுமார், வீரகேசரி பத்திரிகையின் முன்னாள் சிரேஷ்ட உதவி ஆசிரியர் கந்தையா சிவராசா, கெப்பிட்டல் வானொலியின் முன்னாள் சிரேஷ்ட நிகழ்ச்சி முகாமையாளர் தில்லையம்பலம் தரணீதரன் உள்ளிட்டோர் கலைக்கேசரி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# மாடு திருட்டு: பொலிஸ் உத்தியோகத்தர் கைது

அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை - பாத்தியகம பகுதியில் மாடு ஒன்றினை திருடி விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பொலிஸ் உத்தியோகத்தரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கந்தளாய் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தளாய் -பாத்தியகம பகுதியைச் சேர்ந்த ஹேரத் முதியன்சலாகே திலகரத்தின என்பவருடைய மாடு காணாமல்போயுள்ளதாக கடந்த ஜூன் 26ஆம் திகதி கந்தளாய் தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த மாட்டை ஒருவர் வளர்த்து வருவதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைவாக, விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து குறித்த மாட்டை வாங்கியதாக தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, மாட்டை திருடி விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கந்தளாய் - வென்ராசன்புர பகுதியில் வசித்து வரும் 31வயதுடைய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நேற்று (21) சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாக தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் தலைமையகப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# குழந்தைகளுக்கான தடுப்பூசியை உடனடியாக ஏற்றிக்கொள்ளுங்கள்

## அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி வேண்டுகோள்



மீரா நகர் செய்தியாளர்

அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இதுவரை குழந்தைகளுக்கான தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ளாதவர்கள் உடனடியாக அதனை ஏற்றிக்கொள்ளுமாறு அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எப்.எம்.ஏ.காதர் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

குழந்தைகள் மீது நாம் அளவில்லாத பாசமும் அக்கறையும் கொண்டுள்ளோம். அப்படி இருந்தபோதிலும் நம்மில் சிலர் ஏதோ ஒரு கொள்கையின் அடிப்படையில் நமது குழந்தைகளுக்கான தடுப்பூசியை ஏற்றாமல் அலட்சியமாக தவிர்த்து வருகின்றோம். இந்நடவடிக்கையானது குழந்தைகளின் உரிமையை மீறும் செயலாகும்.

எனவே, தடுப்பூசியை இதுவரை ஏற்றாதவர்கள் குழந்தைகளின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டும் ஏனைய நோய்களின் தாக்கத்தில் இருந்தும் அவர்களை பாதுகாக்கும் பொருட்டும் குழந்தைகளுக்கான தடுப்பூசியை அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும். இந்நடவடிக்கையானது குழந்தைகளின் ஆரோக்கியமான வாழ்வுக்கு வழிகோலும் என்றும் தெரிவித்தார்.

# கல்முனையில் மாணவர் ஆராய்ச்சியாளர் செயற்றிட்டம்

இஸ்மாயில்புரம் செய்தியாளர்

அறிவார்ந்த எதிர்காலத்தை நோக்கிய மாணவர் ஆராய்ச்சியாளர் செயற்றிட்டம் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

அறிவார்ந்த எதிர்காலமொன்றுக்கு நாட்டின் பாடசாலை மாணவர்களை முன்னிலைப்படுத்தும் நோக்கில் கல்வியமைச்சின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கிளையின் மூலம் ஆண்டுதோறும் நடைமுறைப்படுத்தப்படும் "பாடசாலை ஆராய்ச்சி வாரம்" செயற்றிட்டத்தின் 2023ஆம் ஆண்டுக்குரிய செயற்பாடுகள் இங்கு நடைமுறைப்படுத்தப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்லூரியின் முதல்வர் யூ.எல்.எம். அமீன், சாய்ந்தமருது மல்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலய அதிபர் எம்.சி.நஸ்லீன் றிப்கா அன்சார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆராய்ச்சி கருத்திட்டம் தொடர்பான நிகழ்த்துகைகள் கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவு மாணவிகளினால் ஸ்மார்ட் தொலைக் காட்சி தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மேற்கொள் ளப்பட்டன.

எதிர்கால கல்வித் திட்டத்தில் புத்தாக்க நட வடிக்கைகளை மையமாகக் கொண்ட கல்வி முறையை அறிமுகப்படுத்துவதுடன் ஆராய்ச்சியானது முன்னிலை வகிக்கின்றது. இங்கு ஆராய்ச்சி எனும் தொனிப்பொருளில் சிரேஷ்ட பிரிவு மாணவிகளின் விசேட நாடகம் அரங்கேற்றப்பட்டதுடன் இந்நாடகம் அனைவருடைய வரவேற்பையும் பெற்றுக்கொண்டது.

இந்நிகழ்வில் மாணவிகளினால் முன்வைக்கப்பட்ட ஆய்வு கட்டுரைகளிலிருந்து சிறந்த முறையில் தொகுக்கப்பட்ட முதல் மூன்று இடங்களைப் பெற்றுக்கொண்ட மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதி அதிபர் (நிருவாகம்) எஸ்.எஸ்.எம்.சமதா மசூது லெவ்வை, உதவி அதிபர்களான ஏ.எச்.நதீரா, எம்.எஸ்.மனுனா, என்.டி. நதீகா, பகுதித்தலைவர் மற்றும் சிரேஷ்ட கனிஷ்ட பிரிவு ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட மாணவிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# அந்நூரியன்ஸ் கிரிக்கெட் பியஸ்ரா கிண்ணத்தை சுவீகரித்தது 2013ஆம் ஆண்டு அணி





கல்குடா முர்ஷித்

வாழைச்சேனை அந்-நூர் தேசிய பாடசாலையின் நூற்றாண்டை முன்னிட்டு பழைய மாணவர் சங்கம் நடத்திய ''அந்நூரியன்ஸ் கிரிக்கெட் பியஸ்ரா 2023'' கிண்ணத்தை 2013ஆம் ஆண்டு அணியினர் சுவீகரித்துக் கொண்டனர்.

வாழைச்சேனை அந்-நூர் தேசிய பாடசாலையின் நூற்றாண்டை முன்னிட்டு பழைய மாணவர்களுக்கிடையிலான ஆறு ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. இப்போட்டியில் 28 அணிகள் பங்கேற்றன. இந்நிலையில், இறுதிப் போட்டிக்கு 2013ஆம் ஆண்டு அணியினரும் 2017ஆம் ஆண்டு அணியினரும் தெரிவாகின.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய 2013ஆம் ஆண்டு அணியினர் ஆறு ஓவர் முடிவில் ஐந்து விக்கெட்டுகளை இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றனர். அவர்களை எதிர்த்து துடுப்பெடுத்தாடிய 2017ஆம் ஆண்டு அணியினர் ஆறு ஓவர்களில் ஐந்து விக்கெட்டுகளை இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றனர். இதற்கிணங்க, 2013ஆம் ஆண்டு அணியினர் 09 மேலதிக ஓட்டங்களால் வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டனர்.

கிரிக்கெட் பியஸ்ரா 2023 சுற்றுப் போட்டியில் சிறந்த தொடர் ஆட்டநாயகனாகவும் துடுப்பாட்ட வீரராகவும் 2013ஆம் ஆண்டு அணியின் வீரர் கே.எம்.இல்ஹாம் தெரிவு செய்யப்பட்டதுடன் சிறந்த பந்து வீச்சாளராக 2007ஆம் ஆண்டு அணியின் வீரர் எம்.சி.றிபாஸ் தெரிவு செய்யப்பட்டார். இளம் வீரருக்கான விருதை 2015ஆம் ஆண்டு அணியின் வீரர் எம்.ஏ.சி.எம். பாஸில் பெற்றுக் கொண்டதோடு லெஜன் வீரருக்கான விருது 1995ஆம் ஆண்டு அணியின் வீரரான ஏ.எல்.எம். நௌபர் பெற்றுக் கொண்டார். சிறந்த பிடி எடுப்புக்கான விருது 1994ஆம் ஆண்டு அணியைச் சேர்ந்த வீரர் எம்.ரீ.வை. அறபாத் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களுக்கான விருதுகளை அதிதிகள் வழங்கி வைத்தனர்.

கிரிக்கெட் பியஸ்ரா 2023 சுற்றுப் போட்டியில் சிறந்த தொடர் ஆட்டநாயகனாகவும் துடுப்பாட்ட வீரராகவும் தெரிவு செய்யப்பட்ட 2013ஆம் ஆண்டு அணியின் வீரர் கே.எம்.இல்ஹாம் இந்தியா சென்று வருவதற்கான விமான பயணச்சீட்டை டைம் ட்ரவல்ஸ் உரிமையாளர் ஐ.எம்.றிகாஸ் வழங்கியிருந்தார்.

இதேவேளை, இந்த சுற்றுப் போட்டியில் கலந்து கொண்ட அனைத்து அணியினர், ஏற்பாட்டுக் குழுவினர் அறிவிப்பாளர்கள், பாடசாலையின் ஊடக குழுவினர் ஆகியோருக்கும் நினைவுச் சின்னங் கள் வழங்கப்பட்டது.

பாடசாலையின் சுற்றுமதில் அமைப்பதற்காக வரைபடத் தினையும் செலவு அறிக்கையையும் தயாரித்து வழங்கிய 1997ஆம் ஆண்டு அணியினர் அதற்கான அன்பளிப்பாக இரண்டு இலட்சம் ரூபா வழங்கியதுடன் 1994ஆம் ஆண்டு அணியினர் முப்பதாயிரம் ரூபாவையும் பாடசாலை நிர்வாகம் மற்றும் பழைய மாணவர் சங்க நிர்வாகிகளிடமும் கையளித்தனர்.

கல்லூரியின் முதல்வர் ஏ.எம்.எம்.தாஹிர் தலைமையில் இடம்பெற்ற அந்நூரியன்ஸ் கிரிக்கெட் பியஸ்ரா 2023 இறுதிப் போட்டி நிகழ்வில், பிரதம அதிதியாக கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் என்.எம்.நௌபீஸ், தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.சி.ஏ.நாசர், சட்டத்தரணி எம்.எஸ்.ஏ.நவாஸ், மூதூர் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாறக், கோறளைப்பற்று மேற்கு கோட்டக்கல்வி பணிப்பாளர் வீ.ரீ.அஜ்மீர், டைம் ட்ரவல்ஸ் உரிமையாளர் ஐ.எம்.றிகாஸ், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் எம்.எஸ்.எம்.அன்வர், சுற்றுப் போட்டியின் தலைவர் சஹாப்தீன் ஸப்ராஸ், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# கிழக்கு மாகாண மீலாதுன் நபி விழா

அட்டாளைச்சேனை செய்தியாளர்

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இம்முறை மீலாதுன் நபி விழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

இந்நிகழ்வையொட்டி கிழக்கு மாகாண மட்டத்தில் பல்வேறு போட்டி நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

இப்போட்டி நிகழ்ச்சிகள் யாவும் எதிர்வரும் செப்டெம்பர் 03 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும். போட்டிகளுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மூலம் குறிப்பிடப்படும் இடமொன்றுக்கு சமுகமளித்து நேரடியாக போட்டியில் பங்குபற்ற வேண்டும்.

கட்டுரை, கவிதை ஆகிய இரு பிரிவுகளில் திறந்த போட்டியாக இடம்பெறும் போட்டிகளுக்காக 19 வயதுக்கு மேற்பட்ட எவரும் பங்குபற்ற முடியும். கட்டுரைப் போட்டியில் பங்குபற்றுபவர்கள் ''சகவாழ்வுக்கு நபிகளாரின் வழிகாட்டல்'' எனும் தலைப்பில் 750 சொற்களுக்கு குறையாமல் கட்டுரைகளை எழுதுதல் வேண்டும்.

''அண்ணலாரின் அழகிய முன்மாதிரி'' எனும் தலைப்பில் கவிதைப் போட்டியில் பங்குபற்றும் போட்டியாளர்கள் தமது கவிதை ஆக்கத்தை எழுத முடியும். மரபுக் கவிதைகள் 40 அடிகள் கொண்டதாக அமைய வேண்டும்.

கிழக்கு மாகாணத்தை வதிவிடமாகக் கொண்டவர்கள் மாத்திரமே இப்போட்டிகளுக்காக விண்ணப்பிக்க முடியும். இம்மாகாணத்தில் உள்ளவர்கள் இன, மத வேறுபாடின்றி இப்போட்டிகளில் பங்குகொள்ள முடியும். போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் தமது பிரதேச கலாசார உத்தியோகத்தர்களிடம் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் கலாசார உத்தியோகத்தர்களிடம் கையளிக்க வேண்டும்.

கட்டுரைப் போட்டியில் முதலாமிடம் பெறுபவருக்கு 15 ஆயிரம் பணப்பரிசும் சான்றிதழும் வழங்கப்படும். இரண்டாமிடம் பெறுபவருக்கு 10 ஆயிரம் ரூபா பணப்பரிசு சான்றிதழ் என்பன வழங்கப்படவுள்ளதோடு, மூன்றாமிடம் பெறுபவருக்கு ஐயாயிரம் ரூபா பணப்பரிசு மற்றும் சான்றிதழ் என்பன வழங்கப்படும்.

கவிதைப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொள்பவர்களுக்கு முறையே ஏழாயிரம், ஐயாயிரம் மற்றும் மூவாயிரம் ரூபா பணப்பரிசும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

போட்டி நிகழ்ச்சிகளில் முதலிடம் பெறும் ஆக்கங்கள் இம்முறை கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மூலம் வெளியிடப்படும் மீலாத் சிறப்பு மலரில் இணைத்துக் கொள்ளப்படும்.

# கஞ்சா வைத்திருந்த இருவருக்கு விளக்கமறியல்

கோணாவத்தை நிருபர்

கஞ்சா வைத்திருந்த இருவர் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 31ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக அக்கரைப் பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கரைப்பற்று பொலிஸார் நேற்றுமுன்தினம்(20) சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது சாகாமம் வீதியில் கஞ்சா வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடமிருந்து 750 மில்லிகிராம் கஞ்சாவும் அட்டாளைச்சேனை பிரதேசத்தில் கைது செய்யப் பட்ட நபரிடமிருந்து 45மில்லிகிராம் கஞ்சா வும் 90மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளும் கைப் பற்றப்பட்டன.

இந்நிலையில், சந்தேக நபர் கள் நேற்று முன்தினம் (20) அக்கரைப் பற்று நீதவான் நீதிமன்றத் தில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவர் களை எதிர்வரும் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மாறு நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் கே.சமீம் உத்தரவிட்டார். இவ்விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மட்டக்களப்பில் நடைபெற்ற பறங்கியர் கலாசார நிகழ்வு







கல்லடி செய்தியாளர்

மட்டக்களப்பு, மண்முனை வடக்கு பிரதேச செயலகமும் பறங்கியர் கலாசார மன்றமும் இணைந்து நடத்திய பறங்கியர் கலாசார நிகழ்வு சனிக்கிழமை (19) மட்டக்களப்பு அருணோதயம் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ச.நவநீதன், மட்டக்களப்பு மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் த.மலர்ச்செல்வன் மற்றும் மட்டக்களப்பு வெட்டுக்காடு கிராமசேவை உத்தியோகத்தர் யு.தனோஜிதா ஆகியோர் விருந்தினர்களாக கலந்து சிறப்பித் தனர்.

இதன்போது பறங்கியர்களின் தனித்துவம், மொழி மற்றும் கலாசாரங்களைப் பிரதிபலிக்கும் வகையிலான பாடல்கள், நடனம் என்பனவும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் மண்முனை வடக்குப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் வளர்மதி ராஜ் வரவேற்புரையாற்றினார்.

# தீப்பரவலினால் மோட்டார் சைக்கிள்கள் தீக்கிரை

மண்டூர் செய்தியாளர்

வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெட்டுக்காடு பிரதேசத்தில் காணி உரிமையாளர் ஒருவர் தனது வயல் காணியிலிருந்த வைக்கோல்களுக்கு தீ மூட்டியுள்ளார். இந்நிலையில், தீப்பரவி அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் கள் இரண்டும் தீக்கிரையாகியுள்ளதாக வெல்லா வெளி பொலிஸார் தெரிவித்தனர். இச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கமைய, வயலுக்குதீமூட்டியவர் கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# ஐஸ் போதைப்பொருள் விற்பனை செய்தவர் கைது

திருக்கோவில் மேலதிக செய்தியாளர்

ஆலையடிவேம்பு, சின்னப்பனங்காடு, மஹாசக்தி கிராமத்தில் ஐஸ் போதைப் பொருள் விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவர் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டதுடன் அவரிடமிருந்து 38 கிராம் ஐஸ் போதைப்பொருளையும் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை பொலிஸ் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்ய அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றில் அக்கரைப்பற்று பொலிஸாரினால் அனுமதி கோரப்பட்டிருந்தது.

இது தொடர்பில் ஆராய்ந்த அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம் ஹம்சா குறித்த சந்தேக நபரை மூன்று நாட்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்யவும் பின்னர் சந்தேக நபரை சட்ட வைத்திய அதிகாரியிடம் உட்படுத்தி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துமாறும் உத்தரவிட்டார்.

# மட்டு.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையேற்பு



மாளிகைக்காடு செய்தியாளர்

மட்டக்களப்பு மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக பதவி உயர்வு பெற்ற பாலரட்ணம் கோகுலராஜன் நேற்று (21) தனது கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

கிராம அபிவிருத்தி திணைக் களத்தின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்ற கடமையேற்பு நிகழ்வில் கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.


கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் பேரில் 2023.01.01ஆம் திகதி முதல் செயற்படும் வண்ணம் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக பதவி உயர்த்தப்பட்ட கோகுலராஜன், நிந்தவூர் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக மிகச் சிறப்பான முறையில் பணியாற்றியவராவார்.

# கிழக்கு பல்கலையில் மாதாந்த இலக்கிய கூடல்

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை தமிழ் கற்கைகள் துறை நடத்தும் மாதாந்த இலக்கியக் கூடல்-02 நாளை புதன்கிழமை காலை 10.30 மணிக்கு கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீட கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் சி. சந்திரசேகரம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் மாத்தளை பெ.வடிவேலனின் இரு நூல்களின் அறிமுகமும் அனுபவப் பகிர்வும் இடம்பெறவுள்ளது.

# போடியார் புலம்பல்!



**ரணில் நினைத்தால் தீர்வு காணமுடியுமாம் எண்டு புதிய கண்டுபிடிப்ப சம்பந்தரு சொல்லியிருக்கிறார் எலுவா....?**

**அவரு சொல்லுறதில உண்மை இருக்கு அது என்ன தெரியுமா ? கடந்த நல்லாட்சி காலத்தில அந்த நரி நினைக்காததாலதான் தீர்வு வரல்ல இப்பவும் அந்த நரி கடசிவரையும் நினைக்காது எண்டத சம்பந்தர் அச்சொட்டா சொல்லிப்போட்டாரு...**

**அவரு இந்த ஜென்மத்திலயும் நினைக்கவும் மாட்டாரு எந்த தீர்வயும் தரவும்மாட்டாரு இப்படியே வாற வருஷம் ஜனாதிபதி எலக்சன் நடத்தும் மட்டும் 13ஐ, காட்டி அவரிட காலத்த ஓட்டத்தான் போகுது அந்த குள்ள நரி..!**

# அயர்லாந்துடனான ரி20 தொடர் இந்தியா வசம்



டப்லினில் நடந்த 2 ஆவது ரி 20 போட்டியில் அயர்லாந்தை 33 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்திய அணி தொடரைக் கைப்பற்றியது.

நாணய சுழற்சியில் வென்ற அயர்லாந்து பந்துவீச்சைத் தெரிவு செய்தது. அதன்படி களமிறங்கிய இந்திய அணியில் கெய்க்வாட், சாம்சன் அதிரடியில் மிரட்டினர். சாம்சன் 26 பந்துகளில் 40 ஓட்டங்களும், கெய்க்வாட் 43 பந்துகளில் 58 ஓட்டங்களும் விளாசினர். கடைசிக் கட்டத்தில் ருத்ர தாண்டவமாடிய ரிங்கு சிங் 21 பந்துகளில் 38 ஓட்டங்களைக் குவித்தார். இந்திய அணி 185 ஓட்டங்களைக் குவித்தது.

இந்திய அணியினரின் துல்லியமான பந்துவீச்சினால் அயர்லாந்து அணி 8 விக்கெட்டுக்கு 152 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. இதனால் இந்திய அணி 33 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் 2-0 என தொடரில் முன்னிலை வகிக்கிறது.

# எல்.பி.எல்லின் புதிய சம்பியனான கண்டி பி-லவ்

## பல விருதுகளை அள்ளிய வனிந்து ஹசரங்க





இறுதிப் போட்டியை பார்வையிட வருகைதந்திருந்த உள்நாட்டு, வெளிநாட்டுப் பிரமுகர்களுடனும் ஜனாதிபதி கலந்துரையாடினார். அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ, தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க ஆகியோரும் போட்டியைக் கண்டுகளித்தனர்.

ஏ. அகீல் சிஹாப்

4 ஆவது லங்கா பிரீமியர் லீக் (எல்.பி.எல்.) தொடரின் சம்பியன் பட்டத்தை பி-லவ் கண்டி அணி முதல் முறையாகக் கைப்பற்றியது. இதற்கு முன் நடைபெற்ற மூன்று தொடர்களிலும் சம்பியன் பட்டம் வென்ற ஜவ்னா கிங்ஸ் இறுதிப் போட்டிக்கு செல்லாததால், முதல் முறையாக வேறொரு அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றும் வாய்ப்பு உருவானது.

அந்த வகையில் ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் குசல் மெண்டிஸ் தலைமையிலான தம்புள்ள அவுரா மற்றும் வனிந்து ஹசரங்க (ஸ்டான்டிங் கேப்டன் அஞ்சலோ மெத்யூஸ்) தலைமையிலான பி-லவ் கண்டி அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

முதலில் துடுப்பெடுத்தாடிய தம்புள்ள அணி 147 ஓட்டங்களை எடுத்தது. இலக்கை துரத்தி களமிறங்கிய கண்டி அணி 19.5 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

**இறுதிப்போட்டியின் விருதுகள்**

போட்டியின் ஆட்டநாயகன் - அஞ்சலோ மெத்யூஸ்
தொடர் ஆட்டநாயகன் - வனிந்து ஹசரங்க
சேஃப் ஹேண்ட்ஸ் ஓப் த டோர்னமெண்ட் - டேவிட் மில்லர்
தொடரின் இளம் வீரர் - லசித் குறொஸ்புள்ளே
அதிக ஓட்டங்கள் - வனிந்து ஹசரங்க
அதிக விக்கெட்டுகள் - வனிந்து ஹசரங்க
அதிக சிக்ஸர்கள் - வனிந்து ஹசரங்க

# ஆசிய கிண்ணத்துக்கான இந்திய அணி அறிவிப்பு

ஆசியக்கிண்ண கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது. இதில் சஞ்சு சாம்சன் நீக்கப்பட்டு திலக் வர்மா தேர்வு செய்யப்பட்டுள்ளார். அதேபோல், சாஹல் இந்திய அணிக்கு தேர்வு செய்யப்படவில்லை.

ஆசியக்கிண்ண கிரிக்கெட் தொடர் இம்மாதம் 30ஆம் திகதி முதல் செப்டெம்பர் 17ஆம் திகதி வரை நடக்கவுள்ளது. நீண்ட மாதங்களாக பயிற்சிபெற்றுவந்த கே.எல் ராகுல் மற்றும் ஸ்ரேயாஸ் ஐயர் இருவரும் இந்திய அணிக்குத் திரும்பியுள்ளனர்.

அதுமட்டுமல்லாமல், ஜஸ்பிரித் பும்ரா அணிக்கு திரும்பியுள்ளதால், உப கேப்டன் நியமனத்தில் மாற்றம் இருக்கலாம் என்று பார்க்கப்பட்டது. ஆனால், உப கேப்டனாக ஹர்திக் பாண்டியாவே தொடர்கிறார்.

**இந்திய அணி விபரம்:**

ரோஹித் சர்மா, விராட் கோஹ்லி, சுப்மன் கில், சூர்யகுமார் யாதவ், திலக் வர்மா, கே.எல் ராகுல், ஸ்ரேயாஸ் ஐயர், ஹர்திக் பாண்டியா, ஜடேஜா, பும்ரா, குல்தீப் யாதவ், முஹமட் சிராஜ், இஷான் கிஷன், ஷர்துல் தாக்கூர், பிரசித் கிருஷ்ணா, முஹமட் ஷமி, அக்சர் படேல், சஞ்சு சாம்சன் (பேக் அப் விக்கெட் காப்பாளர்)

# நான் எந்தப் போட்டிகளுக்குத் திரும்பினாலும் என்னை வலுப்படுத்திக்கொண்டு விளையாட எதிர்பார்ப்பேன்

## அணிக்கு திரும்பியமை தொடர்பில் குசல் பெரேரா



ஆசியக்கிண்ண கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், இலங்கை அணியின் குழாமில் குசல் பெரேரா நீண்ட நாட்களின் பின்னர் இடம்பெற்றுள்ளார். இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர்,

மீண்டும் தேசிய அணிக்குள் நுழைவது மகிழ்ச்சியளிக்கிறது. நான் பெரிய திட்டங்களை வகுக்கவில்லை. காரணம், நான் கடந்த இரண்டு வருடங்களாக ஒருநாள் போட்டிகளில் விளையாடவில்லை. நான் எந்தப் போட்டிகளுக்குத் திரும்பினாலும் என்னுடைய தன்னம்பிக்கை மற்றும் என்னை வலுப்படுத்திக்கொண்டு விளையாட எதிர்பார்ப்பேன். ஒருநாள் போட்டிகளுக்காக நான் தனியாக பயிற்சிகளை மேற்கொள்ளவில்லை.

நான் வெள்ளை நிற பந்துகளில் பயிற்சிகளை மேற்கொண்டுள்ளேன்.

கழகமட்ட ரி 20 மற்றும் மூன்று நாள் போட்டிகளில் விளையாடியுள்ளேன். எனினும், நான் எப்போதும் என்மீது வைத்துள்ள தன்னம்பிக்கையின் அடிப்படையில் விளையாடுவேன் - என்றார்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com




# களுத்துறை வலய சம்பியனான பாணந்துறை அல்-பஹ்ரியா தேசிய பாடசாலை



எம்.எஸ்.எம். முன்தஸிர்

கல்வியமைச்சின் ஏற்பாட்டில் களுத்துறை கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி களுத்துறை மாநகராட்சி மன்ற விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் 18 வயதுக்குட்பட்ட பிரிவில் களமிறங்கிய பாணந்துறை அல் -பஹ்ரியா தேசிய பாடசாலை அணி, ஹேனமுல்ல ஜீலான் தேசிய பாடசாலையை இறுதிப் போட்டியில் தோற்கடித்து களுத்துறை கல்வி வலய சம்பியன் பட்டத்தைத் தனதாக்கிக் கொண்டு மேல் மாகாண மட்டத்திலான போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

அல் - பஹ்ரியா தேசிய பாடசாலையின் விளையாட்டுப் பொறுப்பாசிரியராக சிஹான் மஹ்ரூபும், விளையாட்டு ஆசிரியராக கே.லக்மாலும் சேவையாற்றுகின்றனர். எம்.நியாஸ் (உக்கா) பயிற்றுனராகப் பணியாற்றுகிறார்.

# சம்பியனானது அக்கரைப்பற்று றஹீமிய்யா அணி



பாலமுனை, அட்டாளைச் சேனை செய்தியாளர்கள்

பாலமுனை றைஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் 45 ஆவது வருடாந்த பூர்த்தியை முன்னிட்டு நடத்தப்பட்ட மென்பந்து சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியில் பாலமுனை அல் -அறபா அணியை வீழ்த்தி பள்ளிக்குடியிருப்பு றஹீமிய்யா அணி சம்பியனானது.

பிராந்தியத்தில் உள்ள 32 முன்னனி கழகங்கள் கலந்துகொண்ட தொடரின் இறுதிப்போட்டி அண்மையில் பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

பாலமுனை றைஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் ஐ.எல்.எம். பாயிஸ் ஆசிரியர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் அதிதிகளாக கழகத்தின் ஸ்தாபக உறுப்பினர் முன்னாள் தலைவர் எம்.ஐ.மனாப், கழகத்தின் ஆலோசகரும் அட்டாளைச்சேனை பிரதேச சபை முன்னாள் தவிசாளருமான எம்.ஏ.அன்ஸில் உட்படப் பலர் கலந்து கொண்டனர். இச்சுற்றின் பிரதான அனுசரணையாளராக ஆசிரியர் ஏ.பி. றியாஸ் பங்காற்றினார்.

# பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியின் முதல் குத்துச்சண்டை வீராங்கனை

அஷ்ரப் ஏ சமத்



பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியின் மாணவி மரியம் அனஸ் அண்மையில் இரத்தினபுரி சீவலி அரினா திடலில் நடைபெற்ற பாடசாலை மட்ட கனிஷ்ட மாணவிகளுக்கிடையிலான நெவியா குத்துச்சண்டை வெற்றிக் கிண்ணத்துக்கான சுற்றுப் போட்டியில் (44 - 46 கிலோ எடை பிரிவு) முதல் சுற்றில் வெற்றியீட்டினார்.

முதலாவது சுற்றுப்போட்டியில் மரியம் அனஸ் - இ.பி.எதிரிசிங்க உடன் மோதி வெற்றியீட்டினார். இரண்டாவது தொடரில் மரியம், அனுராதாவிடம் தோல்வியைத் தழுவினார். இச் சுற்றுப் போட்டியில் நாடு முழுவதிலும் முதலாவது முஸ்லிம் மாணவியாக மரியம் அனஸ் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இவர் சிலேவ் ஐலண்ட் குத்துச்சண்டைக் கழகத்தில் இணைந்து பயிற்சி பெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். இவரின் தந்தை கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் மற்றும் பல்வேறு விளையாட்டு வீரரும் ஆவார். என்.என். தனஞ்ஜய இவரின் பயிற்சியாளராவார்.







சம்மாந்துறை ரோயல் மெட்ரிட் கழகத்துக்கும், சவளக்கடை அமீர் அலி விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் சனிக்கிழமை சம்மாந்துறை தேசிய பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வ உதைபந்துப் போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் ரோயல் மெட்ரிட் வெற்றியீட்டியது. எம்.எம்.எம் தாணீஸின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்போட்டிக்கு இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் அமீர் அப்னான் பிரதம அதிதியாகவும், சிறப்பு அதிதிகளாக தமிழன் பத்திரிகையின் விளையாட்டு ஊடகவியலாளர் ஏ. அகீல் சிஹாப், வர்த்தகர்களான சியாஸ் முஹமட் மற்றும் இபாம் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

படங்கள்: ஏ. அகீல் சிஹாப்

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7